Registered as a Newspaper
பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 147
ஞாயிற்றுக்கிழமை
21 ஏப்ரல் 2024
சித்திரை 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



## பேராசிரியராக பதவி உயர்வு!

யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூத்த விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.
பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர்சி.சிறிசற்குண

15



# தமிழர் தேசத்தில் பொதுவாக்கெடுப்பு

**அதை நோக்கிய நகர்வையே முன்னெடுத்துள்ளோம் என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்**

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
ஐக்கிய நாடுகள் போன்ற உலகக் கட்டமைப்புகளுடனும் எமது நிலையை அவர்கள் புரிந்துகொள்ளவும், இனிவருங்காலத்தில் இலங்கையின் வடக்கு – கிழக்கில் பொது மக்கள் வாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபை நிகழ்த்தவும் உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் எமது நிலை பற்றிய ஒரு கைநூலை கொண்டிருக்கவும் ஏதுவாக 'இலங்கையில் கட்டமைத்த இனவழிப்பும் தமிழ்மக்களின் இன சுத்திகரிப்பும்' நூலை வெளியிட்டுள்ளோம் என தமிழ்மக்கள் கூட்டணியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

15

## மேல்நீதிமன்ற நீதிபதியாக அலெக்ஸ்ராஜா நியமனம்

கிளிநொச்சி, ஏப். 21
கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தின் முதலாவது மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய சஹாப்தீன் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்வதால், கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாக அலெக்ஸ்ராஜா பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ -ஒ-113)

## கடலட்டைகளுடன் நான்கு பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 21
வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பகுதியில் சட்டவிரோதமாக இரவு வேளையில் கடல் அட்டைகளை பிடித்த நால்வர் ஒரு படகுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கடற்படையால் கைதுசெய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட நால்வரும் வெற்றிலைக்கேணி கடற்படை

15

முச்சந்தி முரளி



"இக்கரைக்கு அக்கரை பச்சை என்டது இனியாவது எங்கட ஆக்களுக்கு விளங்கினால் சரி"

## வடக்கு சுகாதாரத்துறையில் பௌதிக வளப்பற்றாக்குறை

*சுட்டிக்காட்டிய அதிகாரிகள்*

யாழ்ப்பாணம், ஏப். 21
வடக்கு சுகாதாரத்துறைக்கு பௌதிக வளப் பற்றாக்குறை மிகப் பெரிய சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் சுகாதாரத் துறைசார்ந்த உயர் அதிகாரிகளுக்கும், வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும் இடையில் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போதே அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு ஆளுநர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில், மாகாணத்தில் சுகாதாரத் துறையில் ஏற்படக்கூடிய சவால்

15





## விருந்தினர் விசாவில் கனடா; செல்வோர் தொகை சரிவு

*பலர் நாடு திரும்பினர்*

கொழும்பு, ஏப். 21
கனடாவுக்கு விருந்தினர் விசாவில் செல்லும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் முதல் இந்த வருடத்தின் முதற்பகுதி வரையில் பெருந்தொகையான இலங்கையர்கள் கனடாவுக்கு விருந்தினர் விசாவில் சென்றுள்ளனர்.
எனினும்

15

## உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதியாக வேல்நம்பி



யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாக மூத்த பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

15

## ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல் இன்று

கொழும்பு, ஏப். 21
உள்நாட்டுப்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் இடம்பெற்ற மிகப்பெரிய குண்டுவெடிப்பான ஈஸ்டர் தாக்குதலின் 5ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது.

**பின்னணி**
2019.04.21 ஆம் திகதி அன்று உயிர்த்த ஞாயிறு திருப்பலி பூசைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இலங்

15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உலகப்போர் நெருக்கடியால் தீர்மானங்களில் அவதானம்!

மொஹமட் முஸம்மில் எம்.பி. வலியுறுத்து

**ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நிகழ்கால உலகப்போக்கும், பூகோள ரீதியாக இலங்கை எதிர்கொள்ளவுள்ள நெருக்கடிகள் தொடர்பாகவுமே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 'உலகம் இன்றுள்ள நிலை குறித்து நாம் அவதானம் செலுத்தவேண்டும். குறிப்பாக நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தற்போது மூன்றாம் உலகப்போர் இடம்பெற்றுவருகின்றது. இந்த உலகப்போரின் இறுதி அங்கமாக அணுஆயுதம் பயன்படுத்தப்படக்கூடும். உலகில் பலம்பொருந்திய நாடுகள் தமது நாட்டுக்குள் மோதிக்கொள்வதில்லை. அமெரிக்கா ரஷ்யாவுக்கு சென்றோ அல்லது ரஷ்யா அமெரிக்காவுக்கு வந்தோ நிலத்தை ஆக்கிரமிக்கப்போவதில்லை. இப்போரில் ஏனைய நாடுகள் ஊடாக பலம்பொருந்திய நாடுகள் மோதிக்கொள்கின்றன.

உக்ரைனுக்குள் நேட்டோவும், ரஷ்யாவும் மோதிக்கொள்கின்றன. மத்திய கிழக்கில் அமெரிக்காவும், அதற்கு எதிரான சக்திகளும் சண்டையிடுகின்றன. இவ்வாறு உலகில் எழுந்துள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில், கேந்திர முக்கியத்துவம் மிக்க நாடான இலங்கை எவ்வாறு பிரச்சினைகளையும் முடிவுகளையும் கையாள்வது என்பது தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல் அவசியம்' - என்றார். (ம-44)

## வீழ்ச்சியடையும் இறால் தொழில்

யாழ்ப்பாணம், ஏப். 21

நாட்டில் இறால் தொழில் தற்போது 18 வீதமாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் உட்பட தீவுப் பகுதிகளில் இறால் தொழிலில் அதிகளவான மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்தனர்.

பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் இறால் தொழிலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 2020 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 11 ஆயிரம் மெற்றிக் தொன் இறால் ஏற்றுமதி செய்யப்பட்டது. தற்போது இறால் தொழில் 18 வீதமாகக் குறைந்துள்ளது என்றும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## சுகாதாரச் சீர்கேடு 9,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஏப். 21

நெல்லியடியில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்துக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், நெல்லியடிப் பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் கடந்த புதன்கிழமை திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவக உரிமையாளருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. உணவக உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ-9)

## பாடசாலைகளுக்கு போஷாக்கு அரிசி!

கொழும்பு, ஏப். 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குள்ள உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்காக செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகம் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே இரும்புச் சத்துக் குறைபாட்டைத்தீர்க்கும் நோக்கில் உலக உணவுத் திட்டம் ஊடாக இந்த விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக மாகாண மட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு 735 மெற்றிக் தொன் அரிசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நாட்டிலுள்ள தரம் - 5 வரை உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலையில் ஒருவேளை உணவு வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஆளுநர் பதவிகளில் வருகின்றது மாற்றம்!

கொழும்பு, ஏப். 21

ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இதன்படி வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகிக்கும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தென்மாகாணத்துக்கு மாற்றப்படவுள்ளார். வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சர் ஹாபீஸ் நஸீர் நியமிக்கப்படவுள்ளார். தென்மாகாண ஆளுநராகச் செயற்படும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்கு நெருக்கமானவர் எனக் கருதப்படும் விலி கமகே ஆளுநர் பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ம-44)

## கோழி இறைச்சி விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 21

பண்டிகைக் காலத்தின் பின்னர் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். அதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சி 900 ரூபாவாகவும் ஒரு கிலோ ஆட்டு இறைச்சி 3 ஆயிரத்து 300 ரூபாவாகவும் ஒரு கிலோ மாட்டிறைச்சி 2 ஆயிரத்து 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது (ச-இ)



## ஈரான் ஜனாதிபதியின் வருகை கேள்விக்குறி!

கொழும்பு, ஏப். 21

ஈரான் ஜனாதிபதியின் இலங்கைப் பயணம் திட்டமிட்ட நாளில் நடைபெறுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. ஈரானுக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் போர் மூண்டுள்ளதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஈரானின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி மக்கள் மயப்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விசேட அதிதியாக ஈரான் ஜனாதிபதி பங்கேற்கவிருந்தார். அதைமுன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக ஈரான் அதிகாரிகள்கூட இலங்கை வந்திருந்தனர். இதற்கிடையில் ஈரான்மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் தொடுத்துள்ளதால் பதற்ற நிலை உருவாகியுள்ளது.

மறுபுறத்தில் ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பில் கொழும்பிடம் அமெரிக்கா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் ஈரான் ஜனாதிபதியின் இலங்கைப் பயணம் கேள்விக்குறியாகியுள்ளது. எனினும், அவரின் பயணம் பிற்போடப்படுமா அல்லது இரத்துச் செய்யப்படுமா என்பது குறித்து இன்னும் அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வெளியாகவில்லை. (எ-44)

## உமாஓயா தாமதத்தால் ரூ. 4,200 கோடி இழப்பு

கொழும்பு, ஏப். 21

அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல அரசியல் அழுத்தங்களினால் உமாஓயாத் திட்டத்தை மக்களுக்கு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் வருடத்துக்கு 900 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீரமைப்புத் தாமதமான 5 ஆண்டுகளில் 4 ஆயிரத்து 500 கோடி ரூபா நாட்டுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## மணற்காட்டில் மடு அன்னைக்கு பூரணகும்பம் வைத்து வரவேற்பு!

யாழ்ப்பாணம், ஏப். 21

மடுமாதா அன்னையின் திருச்சொரூபம் யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படும் நிலையில், மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் பூரண கும்பம் ஏந்தி மடு அன்னை வரவேற்கப்பட்டார்.

மடு அன்னையின் வருகையை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளும் கடுமையாக்கப்பட்டிருந்தன. (ம-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடுத்த தேர்தலின் பின்னர் ஜே.வி.பி. எதிர்க்கட்சியாகும்

## சஜித் தரப்பு கூறுகின்றது

கொழும்பு, ஏப். 21

அடுத்த பொதுத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சி என்ற இடத்தை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. பெறும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரும் எதிரணியின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'கிராமிய மட்டத்தில் சஜித்துக்கு ஆதரவு அலை வீசுகின்றது. தம்மை அவர் பார்த்துக்கொள்வார் என மக்கள் உறுதியாக நம்புகின்றனர். எனவே, உள்நாட்டில் சஜித்தின் வெற்றி உறுதியாகியுள்ளது. ஜே.வி.பி. எமக்குச் சவாலாக அமையாது. ஆனாலும் பெரமுனவை விடவும் ஜே.வி.பி. கூடுதல் வாக்குகளைப் பெறும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குரிய வாக்கு வங்கியில் ஒரு பகுதி எமக்கும் வரும். அடுத்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்த்தை ஜே.வி.பி.யே பெறும் என நம்புகின்றேன்.' - என்றார். (ம-44)

# மச்சான் பாலித நானும் வருகிறேன்

## மேர்வின் உருக்கம்

கொழும்பு, ஏப். 21

'மச்சான், பாலித தெவரப்பெரும என்னை தனியாகத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டாய், மேர்வின் சில்வாவையும் உன்னிடம் அழைத்துவருமாறு யமனிடம் கூறு. நானும் விரைவில் வருகின்றேன்...' இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, பாலித தெவரப்பெருமவின் அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அமரர் பாலித தெவரப்பெருமவின் பூதவுடலுக்கு நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்திய பின்னரே மேர்வின் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நானும், பாலித தெவரப்பெருமவும் ஒரு தாயின் பிள்ளைகள்போலவே பழகினோம். என்னை தனிமைப்படுத்திவிட்டு அவர் சென்றுவிட்டார். சில திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் பாலித மச்சான் என்னை விட்டுச் சென்றுவிட்டார். உன்னைத் தேடி நானும் விரைவில் வருவேன். அதுவரை காத்திரு. அவ்வாறு காத்திருக்க முடியாவிட்டால், மேர்வின் சில்வாவையும் விரைவில் கொண்டுவந்து தா என யமனிடம் கூறு. நானும், பாலிதவும் மட்டுமே மரணிப்பதற்கு முன்னர் எமக்கான கல்லறைகளை அமைத்துக்கொண்டவர்கள். நான் மயானத்தில் அமைத்தேன். இவர் வீட்டுத் தோட்டத்தில் அமைத்தார்' - என்றார். (ம-44)

# நடமாடும் சேவை மன்னாரில் ஆரம்பம்

மன்னார், ஏப்.21

மன்னாரில் 'ஸ்மார்ட் எதிர்காலம் நடமாடும் சேவை' மன்னார் நகர சபை மைதானத்தில் நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலைவரை நடைபெறவுள்ளது. ஜனாதிபதியின் வழிகாட்டலில் தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இந்த நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-56)

# ஒன்லைன் விசா முறைமை அறிமுகம்

கொழும்பு, ஏப்.21

கப்பல் மார்க்கமாக இலங்கைவரும் பயணிகளுக்கு புதிய ஒன்லைன் விசா முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நான்கு நாள்களுக்கு இந்த ஒன்லைன் விசா முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அதன் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம் நிமல் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (எ-இ)

# திட்ட அடிப்படையில் நிதி வழங்க 'ஒபெக்' இணக்கம்

கொழும்பு, ஏப்.21

திட்ட அடிப்படையிலான நிதியுதவியின் ஊடாக இலங்கைக்கு உதவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று 'ஒபெக்' நிதியம் தெரிவித்துள்ளது.

தம்முடனான சந்திப்பின்போது, ஒபெக் நிதியத்தின் தலைவர் அப்துல்ஹமீட் அல்கலிபா இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு அவர் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார் என்றும் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலகவங்கியின் வசந்த கால மாநாட்டுக்காக வொஷிங்டன் சென்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பாரிஸ் கிளப்பின் இணைத்தலைவர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார். (எ-இ)

# வடக்கில் இன்றும் வெப்பம் உயரும்!

கொழும்பு, ஏப். 21

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் மொனராகலை மாவட்டத்திலும் இன்று அதிகரித்த வெப்பநிலை காணப்படுமென இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் அநுராதபுரம், வவுனியா, மன்னார், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில இடங்களிலும் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# விபத்தில் மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.21

ரம்பே மெல்சிறிபுர வீதியில் பன்சியகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளான்.

மூவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற மாணவன் உயிரிழந்துள்ளான். (எ-இ)



நுவரெலியா நகரில் வசந்த காலத்தை யொட்டி வருடந்தோறும் நடைபெறும் மலர் கண்காட்சி விக்டோரியா பூங்காவில் நேற்று ஆரம்பமானது. (எ-இ)

# இரு ஆண்டு காலப்பகுதிக்குள் 1,800 மருத்துவர்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஏப்.21


கடந்த இரு ஆண்டுகளுக்குள் ஆயிரத்து 800 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் சுமார் 300க்கும் மேற்பட்ட விசேட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மருத்துவர்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையில் சேவையாற்றிவந்த மூன்றாவது மயக்கவியல் மருத்துவ நிபுணரும் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் நாட்டைவிட்டுச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.வண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் அண்மையில் அடியவர்கள் புடைசூழ சிறப்பாக இடம்பெற்றது. (ச)

## ப.மிளகாய் விலை சரிவு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்.குடாநாட்டில் பச்சை மிளகாயின் விலை திடீரெனச் சரிவடைந்துள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய வறட்சியான காலநிலையால் பச்சைமிளகாய் நல்ல விளைச்சலை ஈட்டிக்கொடுத்துள்ளது. அறுவடை செய்யப்படும் மிளகாய்கள் சந்தைகளுக்குக் கூடுதலாக வந்து சேர்கின்றன. திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ பச்சைமிளகாய் நேற்று முன்தினம் 100 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (ச-17)

## வேலைவாய்ப்பு

மன்னார், ஏப்.21

ஜப்பானில் பணிபுரிவதற்கு திறன்சார் தொழிலாளர்களைத் திரட்டும் பணி மன்னார் நகரசபை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. தாதி, விவசாயத்துறை, பராமரிப்புச் சேவை, துப்புரவுப்பணி, உணவு மற்றும் விமானத்துறை போன்ற பணிகளுக்கே திறன்சார் தொழிலாளர்கள் திரட்டப்படவுள்ளனர். இந்தத் தொழில்களுக்கு விண்ணப்பிப்போர் ஜப்பானிய மொழி அடிப்படை பரீட்சையில் சித்தி பெற்றிருக்கவேண்டும். விண்ணப்பதாரிகள் 18 - 45 வயதுக்கு இடைப்பட்டவராகவும், சிறந்த உடல் ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல்வேண்டும். தெரிவு செய்யப்படும் தொழிலாளர்களுக்கு ஐந்து வருட விசா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## புத்தாண்டு விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஏப். 21

சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா, கைதடி தெற்கு சனசமூகநிலைய மைதானத்தில் கைதடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி கோ.புஷ்பலதா தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக சமுர்த்தி மாவட்டப் பணிப்பாளர் எப்.சி.சத்தியசோதி, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக தலைமைப்பீட முகாமையாளர் க.விக்கினேஸ்வரன், தென்மராட்சி சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி ஆ. உமாதேவி, கௌரவ விருந்தினர்களாக சமூக சேவையாளர்களான செ.உதயராசா , திருமதி அ.உதயகலா, க.கந்தசாமி லயன் சீமாட்டியும் சமூக சேவையாளருமான திருமதி ம.நிர்மலா, கைதடி தெற்கு சனசமூகநிலையத் தலைவர் க.பாலசிங்கம் எனப்பலரும்கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

▣ ▣ ▣

யாழ்ப்பாணம், ஏப்.21

புங்குடுதீவு சமுர்த்தி சமுதாய அடிப்படைவங்கிநடத்தவிருக்கும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுவிழா , புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

3 வயது முதல் 50 வயது வரையானவர்களுக்கான பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. புங்குடுதீவு சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி. வசந்தி ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வேலணை பிரதேசசெயலாளர் க.சிவகரன் பிரதம விருந்தினராகக்கலந்துகொள்ளவுள்ளார். (எ-66)



## தேங்காய்க்கு தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை ஈக்களின் பரவலால் தென்னைகள் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன. அதனால் கூடுதலான தென்னை மரங்கள் காய்க்கும் தன்மையை இழந்துள்ளன.

இந்த நிலையில் யாழ்.குடாநாட்டில் தேங்காய்களின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் அவற்றுக்குத் தட்டுப்பாடும் நிலவுகிறது. தற்போது தேங்காய் ஒன்று 120 ரூபாவை தாண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-17)

## கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை, ஏப்.21

தெல்லிப்பழை, அம்பனை அருள்மிகு ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம், நகுலநவராஜ உமாபதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 முதல் 10.30 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 4 மணிவரை இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-6)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் . பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால்சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். தந்தையுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரம் வழக்கம்போல் இருக்கும்.

**மிதுனம்:**மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். வியாபாரத்தில் சகவியாபாரிகளின் போட்டிகளை முறியடித்து விற்பனையைப் பெருக்குவீர்கள்.

**கன்னி:** தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யநேரிடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். கடன்கள் விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிந்தித்துச் செயற்படவும். சிவபெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் தாக்குதலுக்கு தயாராகியது ஈரான்!

## அமெரிக்கா அறிவிப்பு | தற்காப்புக்கும் தயார்

வொஷிங்டன், ஏப். 21

**இஸ்ரேல் மீது பதில் தாக்குதலை நடத்த ஈரான் தயாராகியுள்ளது என்றும், விரைவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட வாய்ப்பிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



இஸ்ரேல்- ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை ஒரு போருக்கு வழிவகுக்கும் சூழலை நோக்கி நகர்ந்துள்ளது. சிரியாவின் தலைநகர் டமஸ்களில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இந்த நிலைமை போருக்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. மாறிமாறி இரு நாடுகளும் சில குறிப்பிட்ட இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்திவருகின்றன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இஸ்ரேல்- ஈரான் மீது நடத்திய தாக்குதல்களை தொடர்ந்து இந்த நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதுடன், விரைவில் அடுத்த கட்டத் தாக்குதலை நடத்த ஈரான் தயாராகிவிட்டது.

ஈரானும் இஸ்ரேலும் நிழல் போரிலிருந்து நேரடி மோதலுக்கு நகர்வதால் வொஷிங்டன் இராணுவ ரீதியான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டு வருவதாக சர்வதேச ஊடகமான ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

"எங்கள் படைகள் தாக்கப்படும் போது, எங்கள் மக்கள் கொல்லப்படும்போது அமெரிக்கா அதற்கு பதிலளிக்கும்" என்று வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் அண்மையில் கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## அமெரிக்காதான் நிரந்தரம் இளவரசர் ஹரி அறிவிப்பு

லண்டன், ஏப். 21

பிரிட்டன் இளவரசரும் 'சசெக்ஸ் டியூக்' பட்டத்தை தாங்கியவருமான ஹரி, அமெரிக்காவை தன்னுடைய அதிகாரப்பூர்வ இருப்பிடமாக அறிவித்துள்ளார்.

இளவரசர் ஹரி, பிரிட்டன் அரச குடும்பத்திலிருந்து நிரந்தரமாக வெளியேறுவதன் ஆரம்பகட்டமாக இது கருதப்படுவதாக அவதானிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் வசித்து வந்தபோதும் பிரிட்டனை தனது வீடு எனக் குறிப்பிட்டுவரும் ஹரி பாதுகாப்புக் காரணங்களுக்காக இடம்பெயர்ந்ததாகவும் முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தற்போது தன்னுடைய அதிகாரப்பூர்வ இருப்பிடமாக அமெரிக்காவை அவர் அறிவித்துள்ளமையானது பெரும் குழப்பத்தை பிரிட்டன் வாழ் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. (ம)

## வடகொரியா நேற்றும் ஏவுகணைச் சோதனை

பியாங்யாங், ஏப். 21

அமெரிக்காவின் தொடர் எச்சரிக்கைகளையும் மீறி, தென்கொரியாவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வடகொரியா நேற்று ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது.

கொரியத் தீபகற்பத்தில் கடந்த சில தசாப்தங்களாகவே போர்ப்பதற்றம் மிகுந்துள்ளது. அண்மைக்காலமாக தென்கொரியாவில் அமெரிக்கத் தலைமையீடும் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பானின் கூட்டு இராணுவப் பயிற்சிகளும் அதிகரித்துள்ள நிலையில், இதற்குப் பதிலடியாக வடகொரியாவும் பல்வேறுபட்ட இராணுவப் பயிற்சிகளை, ஏவுகணைச் சோதனைகளை நடத்திவருகின்றது. அவ்வப்போது தென்கொரியாவின் எல்லையில் தாக்குதலும் நடத்திவருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே வடகொரியா நேற்று மேற்குக் கடல் பகுதியில், சக்திவாய்ந்த ஏவுகணையையும், விமானத்தை தாக்கி அழிக்கும் ஏவுகணையையும் வெற்றிகரமாகச் சோதித்துள்ளது. (ம)



## இலங்கைச்சிறுவர்களை கண்ணியமாக நடத்துக!

*பிரிட்டன் நீதிமன்றம் உத்தரவு*

லண்டன், ஏப். 21



கனடாவுக்குச் செல்வதற்காக பயணித்தபோது, பிரிட்டனில் சிக்கிய இலங்கை சிறுவர்களைப் பிரிட்டன் சிறுவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளுடன் நடத்துமாறு பிரிட்டனின் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு முதல் பிரிட்டனின் டியாகோகார்சியாவில் சிக்குண்டுள்ள ஐந்து இலங்கைத் தமிழ் சிறுவர்களும் பிரிட்டனின் சிறுவர்கள் போல தீமையிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் எனப் பிரிட்டனின் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## பிற்போடப்பட்டது இந்தியப் பயணம்

வொஷிங்டன், ஏப். 21

தொழிலதிபரும் டெஸ்லா தலைமை செயல் அதிகாரியுமான எலான் மஸ்க் இன்று இந்தியாவுக்குச் செல்லவிருந்த நிலையில், அவருடைய பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டெஸ்லா பணிகள் காரணமாக பயணம் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த ஆண்டின் பிற்பகுதியில் இந்தியா வரவுள்ளதாகவும் எலான் மஸ்க் தனது டுவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து, இந்தியாவில் டெஸ்லா கார் தொழிற்சாலை அமைப்பது குறித்தும், ஸ்டார்லிங்க் சேவை அறிமுகம் செய்வது குறித்த அறிவிப்பையும் மஸ்க் வெளியிடுவார் என்று சொல்லப்பட்ட பின்னணியில் தற்போது அவருடைய பயணம் பிற்போடப்பட்டமை பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## கனடாவுக்கு வருதற்கு முன் காஸா மக்கள் இறந்துவிடுவர்

*பலஸ்தீன கனேடியர்கள் கவலை*

ஒட்டாவா, ஏப். 21

கனடாவுக்குத் தப்பி வருவதற்குள் காஸாவிலிருக்கும் தங்கள் உறவினர்கள் உயிரிழந்துவிடக்கூடும் என கனடாவில் வாழும் பலஸ்தீன கனேடியர்களுக்கான அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன மோதல்களைத் தொடர்ந்து, பலஸ்தீனத்தில் வசிக்கும் கனேடியர்களின் உறவினர்களுக்கு ஆயிரம் தற்காலிக குடியிருப்பு விசாக்கள் வழங்குவதாக பெடரல் அரசு ஜனவரி மாதம் அறிவித்திருந்தது.

ஆனால், அந்த அறிவிப்பு வெளியாகி மூன்று மாதங்கள் ஆனபின்பும், இது வரை பலஸ்தீனத்திலிருந்து ஒரு கனேடியரின் உறவினர்கூட கனடாவுக்கு அழைத்து வரப்படவில்லை. விசாக்களுக்கு விண்ணப்பித்த பலர் போரில் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே கனடாவுக்கு தப்பி வருவதற்குள் காஸாவிலிருக்கும் தங்கள் உறவினர்கள் உயிரிழந்துவிடக்கூடும் எனக் கனடாவில் வாழும் பலஸ்தீன கனேடியர்களுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பனை வெல்லம்: எகிறியது விலை

சாவகச்சேரி, ஏப். 21

**யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம் கிலோ 2 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுவதால் தமது தேவைகளுக்கு பனை வெல்லத்தைக் கொள்வனவு செய்யமுடியவில்லை என பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் வெல்ல உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பனை வெல்லம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும்போதும் கூட, புலம்பெயர் நாடுகளில் இருந்து வந்தவர்களும், தென்பகுதி வியாபாரிகளும் அதிக அளவில் அவற்றைக் கொள்வனவு செய்துவருகின்றனர். இதனால் தமது தேவைக்கு பனை வெல்லத்தைக் கொள்வனவு செய்ய முடியவில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டாகவுள்ளது.

இது குறித்து உரிய சங்கங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, விறகு விலை, பதநீர் கொள்வனவு மற்றும் பணியாளர்களின் வேதனம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## பேருந்துகள் எரிப்பு: இழப்பீடு தரவில்லை

கொழும்பு, ஏப். 21

2022 ஆம் ஆண்டு காலிமுகத்திடல் போராட்டத்தின்போது பேருந்துகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், எந்தவித இழப்பீடும் கிடைக்கவில்லை. போராட்டத்தின்போது நடத்தப்பட்ட தாக்குதல்களின்போது சுமார் 40 பேருந்துகள் சேதமடைந்திருந்தன என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## அதிக பணம் அறவிடும் பாடசாலை நிர்வாகங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.21

பெற்றோரிடமிருந்து பெருந்தொகைப்பணத்தை பாடசாலை அபிவிருத்திக்கென பாடசாலை நிர்வாகத்தினர் அறவிடுகின்றனர் என இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சில பிரபல பாடசாலைகளில் மாதம் 5 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது. இதனால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர் பணம் செலுத்த முடியாமல் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு அறவிடப்படும் பணத்துக்குரிய வரவு - செலவுக் கணக்குகள் உரிய முறையில் பேணப்படுவதில்லை. கல்வித் திணைக்களமும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதில்லையெனவும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (எ-6)

## இரண்டு பெண்கள் சடலங்களாக மீட்பு

கொழும்பு, ஏப். 21

களுத்துறை, இசுரு உயன பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து இரு வயோதிபப் பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனரா என்ற கோணத்திலும் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

65 மற்றும் 79 வயதுகளுடைய இரு பெண்களே நேற்றுமுன்தினம் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த வீடு அமைந்துள்ள பகுதியில் அதிகளவு துர்நாற்றம் வீசியுள்ளது எனவும், இது தொடர்பில் பிரதேச மக்கள் களுத்துறை தெற்கு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (எ-44)

## கனேடிய இந்து வர்த்தகர் சங்கத்துக்கு பட்ஜெட் பார்வையாளராக அழைப்பு!

கனேடிய வரவு - செலவுத்திட்ட சமர்ப்பணத்தின்போது நாடாளுமன்றத்தில் பார்வையளராகக் கலந்துகொள்ளுமாறு கனேடிய இந்து வர்த்தகர் சங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கனேடிய மத்திய அரசாங்கங்களில் வரவு - செலவுத்திட்ட சமர்ப்பணங்களின் போது இதுவரை, கனடாவின் பூர்வீக குடிகளைச் சேர்ந்த வெகுசில சிவில், சமய அமைப்புகளுக்கே பார்வையாளராகக் கலந்துகொள்ளும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது கனேடிய இந்து வர்த்தகர் சங்கமும் அந்தக் கௌரவத்தைப் பெற்றுள்ளது.

கனேடிய அரசாங்கத்தின் அழைப்பை பார்த்து தாங்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்ததாக கனேடிய இந்து வர்த்தகர் சங்கத்தின் தலைவர் குஷாகர் டற் சர்மா தெரிவித்துள்ளார். (ம-6)



வவுனியா பொதுமருத்துவமனையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு குருமன்காடு காளிகோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ம-18)



## கிராமியப் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

கிளிநொச்சி, ஏப். 21

கிராமிய பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, கிளிநொச்சி மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், கடற்றொழில் அமைச்சரும், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, மேலதிக செயலர், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி தெற்கு பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர், மாவட்ட விளையாட்டுப் பிரிவு உத்தியோகத்தர்கள், அதிபர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)

## பயிற்சி நிலையத்தில் விற்பனை நிலையம்!

கிளிநொச்சி, ஏப். 21

வட்டக்கச்சியில் அமைந்துள்ள, கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் விற்பனை நிலையம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)

## இஞ்சிக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.21

தென்மராட்சி சந்தைகளில் இஞ்சிக்கிழங்குக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து, சந்தைகளுக்கு இஞ்சிக்கிழங்கு வராததால், ஒரு கிலோ இஞ்சி 6 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ப-9)



பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சால், வேலணைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 6 விவசாயிகளுக்கு, நீர்க்குழாய்கள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ப-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# நீதிக்கான நெடும் பயணம்!

இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட அன்றைய காலைப்பொழுதை தசைத் துண்டுகளும் குருதிச் சகதியுமாகத்தான் இலங்கைத் தீவு எதிர்கொள்ள நேரிட்டது. 'உயிர்த்தஞாயிறு தாக்குதல்' என்று உலக வரலாற்றில் அறியப்படும் அந்தத் தாக்குதல்கள் இலங்கையை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகையும் கிலிகொள்ள வைத்தன. உலகப் பயங்கரவாத அமைப்பான 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின், அப்போதைய தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி, தாக்குதலுக்குத் தாமே பொறுப்பு என்று அறிவித்ததையடுத்து, உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் 'உலகப் பொதுப்பிரச்சினையாக' மாற்றம் பெற்றன, அவ்வாறே பார்க்கப்பட்டன. அமெரிக்க அதிபர் முதல் ஆபிரிக்கத் தலைவர்கள் வரையில் அனைவரும் ஓரணியில் நின்று இந்தத் தாக்குதல்களை எதிர்த்தனர், கண்டித்தனர்.

ஆனால், ஒரு பயங்கரவாதத் தாக்குதல் இலங்கை அரசாங்கத்தால் அதற்கேயுரித்தான கனதித் தன்மையுடன் கையாளப்பட்டதா? குருதிச் சகதிக்குள் கொன்று புதைக்கப்பட்ட 200க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களின் உயிருக்கு நீதி கொடுக்கப்பட்டதா? என்றால், அதற்குரிய பதில்கள் பல்லிழிக்கும். சரியான வகையில், வெளிப்படையான மக்களாட்சி நடைபெறும் நாடென்றால், தாக்குதலின் பின்னணி தொடர்பான அத்தனை விடயங்களும் பகிரங்கப்படுத்தப்பட்டு, மக்களின் உளக்காயங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு, இழப்பீடுகள் உரிய முறையில் வழங்கப்பட்டு பல மாதங்கள் கடந்திருக்கும். ஆனால், இலங்கையில் நடப்பதென்ன? உயிர்த்தஞாயிறு தாக்குதலில் காவுகொள்ளப்பட்ட உயிர்ப்பலிகள் இன்று முற்றுமுழுதான அரசியலாக மாற்றப்பட்டுள்ளது என்றால் அதை மறுக்க முடியுமா?

நீதி மறுக்கப்படுவது ஒருபுறம் இருக்கையில், நீதியைத் தேடித்தேடி நொந்து - நலிந்து போனவர்களை மேலும் மேலும் துன்பப்படுத்தும் வகையிலான கருத்துகளைத் தெரிவிப்பதில் கைதேர்ந்தவர்களாகத்தான் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இருக்கின்றனர். இதன் ஆகப்பிந்திய வரவாக, 'உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் சூத்திரதாரிகள் மற்றும் தாக்குதல் பின்னணி என அனைத்தும் எனக்குத் தெரியும். நீதிமன்றம் பாதுகாப்பும் உத்தரவாதமும் வழங்கும் பட்சத்தில் சாட்சியம் வழங்கத் தயாராக இருக்கின்றேன்' என்று தெரிவித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சாட்சியத்தையும் பதிவுசெய்திருந்தார் மைத்திரிபால சிறிசேன. தாம் ஆட்சியமைத்தால், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அனைத்து விசாரணைகளும் நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொணரப்படும் என்று அறிவித்திருக்கின்றார் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித். ஆக, இந்த விடயம் நீதிக்கான ஆரம்பப் புள்ளியைக்கூட எட்டவில்லை என்பதே இதிலிருந்து புலனாகின்றதல்லவா?

கொழும்புக்கும் பொறுப்புக்கூறலுக்கும் கொஞ்சமும் தொடர்பில்லை. ஈழத்தமிழர்கள் இதை நன்கறிவார்கள். தற்போது சிங்கள மக்களும் பொறுப்புக்கூறாமை, காயங்களுக்கு மருந்திடாமை, மீண்டும் நிகழாது என்பதை உறுதிப்படுத்தாமை என்பவற்றின் வலியை உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விடயத்தில் அனுபவிக்கத் தலைப்பட்டுள்ளனர். தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்பார்கள். நீதி எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு குற்றவாளி தப்பித்துச் செல்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கவே செய்கின்றது. ஆதலால், உயிர்த்தஞாயிறு தாக்குதலாக இருந்தாலும் சரி, போர்க்குற்றங்களாக இருந்தாலும் சரி, 'காயங்களும் வலியும் பொதுவானதே' என்ற புரிதலுடன் நீதியைத் தேடவேண்டிய கடப்பாடு தமிழ் - சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இருக்கவே செய்கின்றது. அந்தப் புரிதலும், இணக்கமும் அதற்கூடான சகோதரத்துவமும் எவ்வளவுக்கெவ்வளவு வலுப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நீதியின் கதவுகள் அகலத்திறக்கும்.



# ஈரான் அதிபர் வருகை அமெரிக்கா அதிருப்தி



**கொழும்பு, ஏப். 21**

**ஈரானிய ஜனாதிபதியின் இலங்கைப் பயணம் தொடர்பில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் வெளிவிவகார அமைச்சிடம் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஷி ஒருநாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார். கடந்த வாரம் ஈரானால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட வான்வழித்தாக்குதலை அடுத்து பிராந்தியத்தில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைஷியின் இலங்கைப் பயணம் தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## அத்தியாவசிய சேவையாக மின்சாரம்- எரிபொருள்

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## தேரர் கைது

கொழும்பு, ஏப். 21

இமதுவ, பெகிரிஹேன பிரதேசத்தில் உள்ள விகாரையொன்றில் கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் விகாரையின் அறையிலிருந்து 18 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ

## சிறுவர் இல்லங்களில் எண்ணிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 21

நாடளாவிய ரீதியில் உள்ள 354 சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் தற்போது 9 ஆயிரத்து 147 சிறுவர்கள் காணப்படுகின்றனர் என்று நன்நடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## ரஷ்யப் படைகளில் இலங்கையர் இல்லை

### தூதரகம் தெரிவிப்பு

உக்ரைனுடனான போரில் இலங்கையர்கள் ஈடுபடுத்தப்பட்டதாகக் கூறப்படுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை என கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகம் அறிவித்துள்ளது. சுற்றுலா விசாவில் சென்ற இலங்கையர்களும் ரஷ்ய இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ளனர் என்றும் ரஷ்ய இராணுவத்திலிருந்த இலங்கையர்கள் பலர் உயிரிழந்துள்ளனர் என்றும் வெளியான தகவல்களுக்கே ரஷ்யா பதிலளித்துள்ளது. விண்ணப்பதாரர்களின் செல்லுபடியாகும் ஆவணங்களின் அடிப்படையில், இராணுவ நடவடிக்கைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தூதரகம் உறுதிப்படுத்தியது. (ச-இ)

## நாளை

22.04.2024

திங்கட்கிழமை

சித்திரை - 09

சுபநேரம் : 12.01 - 01.31

ராகுகாலம் : 07.31 - 09.01

## நாளொரு நல்வார்த்தை

கண்ணுக்குத் தெரிந்த
மனிதனை மதிக்காவிட்டால்...
கண்ணுக்குத் தெரியாத
கடவுளை மதித்தும்
பயன் இல்லை

-அன்னை தெரேசா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் - இஸ்ரேல் மோதலால் இலங்கைக்கு பெரும் ஆபத்து

*பேராசிரியர் வசந்த அத்துகோரல சுட்டிக்காட்டு*

**கொழும்பு, ஏப்.21**

**ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுடன் மோதல்கள் தொடருமானால், ஈரானுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் கையாளும் இலங்கையின் பொருளாதாரமும் பாரிய ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.**

எரிபொருளை இறக்குமதி செய்வதில் இலங்கை ஈரானுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருக்காவிட்டாலும், இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்யும் நாடுகளுக்கு ஈரானே பிரதான எரிபொருள் வழங்குநர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியில் தொண்ணூறு சதவீதம் சீனாவுக்கே செல்கிறது. இதற்கு மேலதிகமாக, இந்தியா மற்றும் ஜப்பானுக்கும் ஈரான் எரிபொருளை ஏற்றுமதி செய்கின்றது. இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து இலங்கை கணிசமான அளவு எரிபொருளை கொள்வனவு செய்கிறது. இலங்கை ஈரானுக்கு சுமார் 80 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்கின்றது. 10 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களை ஈரானில் இருந்து இறக்குமதி செய்கிறது. இலங்கைக்கு பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் ஈரான் 61ஆவது இடத்தில் உள்ளது. ஈரான், இஸ்ரேலுக்கு இடையிலான மோதல்களும், போட்டிகளும் மேலும் அதிகரிக்கலாம் எனவும், இந்த மோதல்கள் உலகப் போராக உருவாகும் அபாயம் உள்ளது என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (எ-இ)

## மரண அறிவித்தல்



மண்ணில் 27 . 10 . 1949

விண்ணில் 16 . 04 . 2024

### திருமதி பரமலிங்கம் புஸ்பவதி

**(ஞானம்ஸ் மில் உரிமையாளரின் அன்பு மனைவி)**

யாழ்/ புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, பம்பலப்பிட்டி, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமலிங்கம் புஸ்பவதி கடந்த 16.04.2024 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கமலம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், குணபாலசிங்கம் (கனடா), புஸ்பகாந்தி (இலங்கை), குகநேசன் (கனடா), குகதாசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற திலகவதி, புனிதவதி (UK), காலஞ்சென்ற கனகலிங்கம், புஸ்பவதி (டென்மார்க்), காலஞ்சென்ற மகாலிங்கம், சொர்ணாவதி (இலங்கை), காலஞ்சென்றவர்களான பாஸ்கரன் சுரேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதா (Source party), சுபா (BSc Chemist/Pharma Specialist), சுகந்தி (Nafisa Boutique), ரூபன் (Paralegal / Realestate ), வாசன் (APK HVAC PRO) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவானந்தராஜா, பாஸ்கரன், நவநீதன், தர்ஷினி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவலிங்கம், ஈஸ்வரி (கனடா), வசந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சனோஜ், சஃபியா, சஜின், நிவின், ஹகூஷினா, ரியோ, ஹறினி, நெபிகூஷா, செந்தன், பொகூஷான், தகிகூஷ், வருணி, ரூபிணி, அருணி, கெஸ்வின், நேஹா, விகாஸ், கூஷர்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

**அன்னாரின் பூதவுடல் இன்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப.5.00 மணிமுதல் 9.00 மணிவரையும் நாளை திங்கட்கிழமை 22.04.2024 காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரையும்** Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1 **இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரையில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பின்னர் முற்பகல் 11.30 மணிக்கு** Highland Hills Crematorium 12492 Woodbine Avenue Gormley, ON L0H 1G0 **இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

மேலதிக தொடர்பு: ரூபன் (மகன் - 647-9285628, வாசன் (மகன் - 416-8784879,
ஆனந்த் (மருமகன்- 416-8264357, பாஸ் (மருமகன்- 647-8958671,
நீதன் (மருமகன்- 647-9226343

**தகவல்: திருமதி சிவலிங்கம் புஸ்பகாந்தி - 0729106007**



# வயலில் மயங்கியவர் உயிரிழப்பு

வயலில் வேலை செய்துகொண்டிருந்தவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவெளி குளத்துவயலில் நடந்துள்ளது.

மூதூர் பாலத்தடிச்சேனை கிராமத்தில் வசித்துவரும் 3 பிள்ளைகளின் தந்தையான சூரியமூர்த்தி சுதாகரன் (வயது 52) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும், வெயிலில் நின்று வயல் வேலை செய்கின்றவர்கள் வெயில் உச்சமான நேரங்களில் வயல் வேலை செய்வதை தவிர்த்துக் கொள்வதன் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

# வெளிநாட்டுப் பெண் போதையுடன் கைது

கொழும்பு, ஏப். 21

போதைப்பொருள்களுடன் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 19 கிராம் குஷ் போதைப்பொருளும், 3 கிராம் ஹேஷ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

# அன்னதான மடங்களில் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்.குடாநாட்டு ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெற்று வரும் நிலையில் அன்னதானம் வழங்கும் மடங்களில் திடீர் சோதனைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

அன்னதானம் வழங்கும் மடங்களில் சமையலில் ஈடுபடுபவர்கள் சுகாதாரப் பிரிவின் சான்றிதழ் பெற்றிருத்தல் கட்டாயம்.

குடிதண்ணீர் வழங்கல், சமையல் செய்யும் இடங்கள் ஆகியவை சுகாதார விதிகளுக்கமைய துப்புரவு பேணப்படவேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (ஏ-இ)

# எச்.ஐ.வி. அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 21

நாட்டில் கடந்த 3 வருடங்களில் ஆயிரத்து 700 எச்.ஐ.வி. நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல்நோய் மற்றும் எச்.ஐ.வி தடுப்பு மையத்தின் பணிப்பாளர் ஜனக வேரகொட இத்தகவலை தெரிவித்துள்ளார்.

நோய்த்தாக்கங்களில் 18-25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 550 க்கும் அதிகமாக உள்ளனர். இது முழு நோயாளர்களின் எண்ணிக்கையில் 3 இல் ஒரு பங்காக அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் புதிய விவரங்கள் சி.ஐ.டியிடம்

*அருட்தந்தை சிறில் காமினி தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.21



ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தில் இதுவரையில் வெளிவராத 8 விடயங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கியுள்ளேன் என்று கொழும்பு ஆயர் இல்லத்தின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அருட்தந்தை சிறில் காமினி நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

இது தொடர்பில் கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் செயற்படும் பொறுப்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் இல்லை என குறிப்பிடவில்லை. மாறாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரை உரிய முறையில் சேவையாற்றுவதற்கு இடமளிக்கவில்லை என தோன்றுகிறது.

அதேநேரம், சவால்மிக்க கேள்விகள் எவையும் கேட்கப்படவில்லை. வெளியாகாத பல தகவல்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டன. ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுமாயின் ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னணியில் உள்ள சகல தரப்பினர் தொடர்பான தகவல்களும் வெளியாகும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொதுவேட்பாளர் விடயத்தில் சரியான தீர்மானமே தேவை!

## தமிழரசுக் கட்சிக்கு சுரேஷ் அறிவுறுத்து

**கொழும்பு, ஏப். 21**

**தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பான சரியானதொரு தீர்மானத்தை ஒன்று பட்டு எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டிருக்கிறது என்று ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் செலுத்தப்படவுள்ள வடக்கு கிழக்கு மக்களைச் சேர்ந்த 11 லட்சம் வாக்குகளையும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு எடுக்க வேண்டிய தேவையுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தும் விடயம் தமிழ்மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான முயற்சி. ஜனாதிபதித் தேர்தல் இதற்கானதொரு களத்தைத் திறந்து விட்டுள்ள நிலையில் அதனை நாம் உரிய வகையில் பயன்படுத்துவது அவசியமானது. தமிழ்மக்களின் அதிக பட்சப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கின்ற தமிழரசுக் கட்சி இந்தக் களத்தை எவ்வாறு பயன்படுத்தப் போகிறது? என்ற கேள்வி எம்மத்தியிலுள்ளது. தமிழரசுக் கட்சிக்குள்ளிருக்கின்ற ஒருசிலர் தமிழ்ப் பொது வேட்பாளர் தேவையற்றது என்ற அடிப்படையிலும், ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்பட்ட பின்னர் யாருக்கு வாக்களிக்கலாம்? என்பதைத் தீர்மானிக்கலாம் என்ற வகையிலும் கருத்துகள் தெரிவிக்கின்றனர். தமிழ்மக்களின் இனப் பிரச்சினை தொடர்பில் சிந்திக்கக் கூடிய தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த வாய்ப்பினைத் தவறவிடக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பான இணக்கப்பாடு விரைவில் எட்டப்படுமென நம்புகின்றோம். இயலுமான வரை தமிழ்த்தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்காமல் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதன் மூலம் நாம் எதிர்பார்த்த வெற்றியை அடைந்துவிட முடியாது - என்றார். (ம-66

## நூல் வெளியீடு

கொடிகாமம், ஏப். 21
வயலூரான் மட்டுவில் சுதாகரனின் 'வெண்பாமாலை' எனும் நூல் வெளியீட்டு விழா, கொடிகாமம் நட்சத்திர மஹாலில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. மாவட்ட சமூக சேவை ஓய்வுநிலை உத்தியோகத்தரும் எழுத்தாளருமாகிய வே. தபேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கைதடி கலைவாணி வித்தியாலய ஆசிரியர் சி.சிவகாந்தன், யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, நூலாசிரியர் தயாபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 21
புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம், நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்புப் பூசைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.
மாலை 3.30 மணிக்குச் சிறப்புப் பூசை, வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வரும் திருக்காட்சியும் நடைபெறுமென ஆலய ஆதீன கர்த்தா தெரிவித்துள்ளார். (ப-66)



## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 21
அமரர் செபமாலை ஜெறின்சனின் 3 ஆம் ஆண்டு நினைவாக சென். மேரிஸ் கழகம் நடத்தும் மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு, நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய முன்றலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-66)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.21
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் ந.உமாகரன் தலைமையில் தலைமைக் காரியாலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
சங்கத்தின் பொதுச்சபைப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அழைத்துள்ளார். (எ-66)

## அறங்காவலர்தின நிகழ்வு

பளை, ஏப். 21
இயக்கச்சி, மல்வில் கிருஷ்ணன் கோவில் தர்மகர்த்தா சின்னத்தம்பி அறக்கட்டளையின் ஏற்பாட்டிலான, அறங்காவலர்தின நிகழ்வு, கோவில் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-9)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப்.21
சிவபூமி அறக்கட்டளை, யாழ். போதனா மருத்துவமனை, மருத்துவபீடம் ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள பெண்கள் சுகநல நிலையத் திறப்பு விழா, இல.61, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-66)

## புத்தாண்டு விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஏப். 21
கோப்பாய் சமுர்த்தி வங்கியின், புத்தாண்டு விளையாட்டு விழா, கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

★★★★

யாழ்ப்பாணம், ஏப்.21
வேலணை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி நடத்தவிருக்கும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா, வேலணைப் பிரதேச செயலக வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)


## வில்லூன்றியில் சித்திரா பூரணை

வில்லூன்றி விநாயகர் ஆலய புனித தீர்த்தத்தில் சித்திராப் பூரணை வழிபாடுகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.
அதிகாலை விசேட அபிசேகம், பூசைகளும் இடம்பெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளது. காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பக்தர்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலராகக் கடமையாற்றிய எப். சி.சத்தியசோதி, யாழ்.மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார். இவரின் சேவையைப் பாராட்டி, பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினரால், பிரதேச செயலக மண்டபத்தில் பிரிவுபசார விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை நடத்தப்பட்டது. (ப-9)



நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் காவடித் திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் காவடிகள் எடுத்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ச-17)




கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் தியாகதீபம் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழக முன்றலில் பொதுமக்களுக்கு தாகசாந்தி வழங்கப்பட்டதோடு, பல்கலைக்கழக பொங்குதமிழ் பிரகடன தூபியில் அமைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-இ)



அன்னை பூபதியின் 36 ஆவது நினைவு தினம் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அஞ்சலி நிகழ்வை திருகோணமலை ஒன்றிணைந்த சமூகச் செயற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். (எ-27)

தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலகினரால் "சிறுவர்களது கடமைகளும், பொறுப்புகளும்" எனும் தொனிப்பொருளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (எ-9)





சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவாற்றினார். (எ-27)

தென்னையைத் தாக்கும் வெள்ளை ஈ தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரின் வழிகாட்டலில், காரைநகர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-66)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புத்தாண்டை முன்னிட்டு, மென்பந்து கிரிக்கெட் போட்டி, வட்டுக்கோட்டை கமோனியர் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. போட்டியில் மானிப்பாய் பொலிஸ் பிரிவு, வட்டுக்கோட்டைப்பொலிஸ்பிரிவு மற்றும் வளர்மதிஸ்போட்ஸ் கிளப் என மூன்று அணிகள் பங்குபற்றின. மானிப்பாய் பொலிஸ் பிரிவும், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவும் ஓரணியாக இணைந்து வளர்மதி ஸ்போட்ஸ் கிளப் அணியுடன் மோதின. வளர்மதி ஸ்போட்ஸ்கிளப் அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (ப)





நானாட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில், 'நிலைபேறான வீட்டுத்தோட்டம்' நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்பட்ட, விதைகள் மற்றும் நாற்றுகள் வழங்கும் நிகழ்வு, நானாட்டான் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-56)



வலிகாமம் கல்வி வலய மட்ட மேசைப் பந்துப் போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி முதல் இடத்தைப் பெற்று வலய மட்டத்தில் சம்பியனாகியுள்ளது. இரண்டாம் இடத்தை வட்டு. இந்துக்கல்லூரியும் மூன்றாம் இடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ச-555)

உத்தியோகத்தர்களின் திறன் விருத்திக்காக, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அலுவலக முகாமைத்துவ முறைமை தொடர்பாக, நூறு உத்தியோகத்தர்களுக்கான இரு நாள் பயிற்சி நெறியில் முதலாம் நாள் பயிற்சி நெறி, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-66)





சாவகச்சேரி புகையிரத நிலைய வீதி, தேவர்புலம் ஆவரம் சாட்டி முருகமூர்த்தி கோயில் குடமுழுக்கு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ப-9)

முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எஸ்.பி.பொற்கேணி கிராம மக்களின் குடிதண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு 'லைகா ஞானம்' அறக்கட்டளையின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட மூன்று குழாய்க் கிணறுகள் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன. (எ-இ)



திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா சமேத காயாரோஹண சுவாமி ஆலய வருடாந்தப் பிரம்மோற்சவப் பெருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (எ-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றிவளைப்பில் 775 பேர் கைது

கொழும்பு, ஏப்.21

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டதுடன், 6 பெண்கள் உட்பட 775 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 18 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்களுக்கு அடிமையான 9 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பின்போது 123 கிராம் ஹெரோயின் , 623 கிராம் ஐஸ் , 443 கிராம் கஞ்சா , 11 கிராம் ஹெரோயின் மற்றும் 75 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இன்று சிரமதானம்

யாழ், ஏப். 21

தெல்லிப்பழை வீணாக்கடவை காசிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நிலையில் முன்னேற்பாடாக இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி முதல் ஆலயத்தில் சிரமதானம் நடைபெறவுள்ளது. அடியவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(ஓ-66)


## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெருவில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 311 7923

## Hotel Vacancies

- Chef - (Sri Lankan Food)
- Cook - Allround (Male / Female)
- Kitchen Helper
- Waiters (Male / Female)
- Room Boys (Male / Female)
- Receptionist (Male / Female)

077 822 2965, 077 301 9756

(CS/54749) J-1

## வேலையாட்கள் தேவை [பெண்]

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு இனிப்பு சிற்றுண்டிப் பண்டங்கள் தயாரிப்பதற்கு உதவியாளர்களாக வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.
மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளலாம்.

074 391 0843

(cs54784) (N-1)

## காணி விற்பனைக்கு

வலிகாமம் மேற்கு, மூளாயில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (மூளாய் வைத்தியசாலைக்கு அருகாமையில் குடியிருப்பு சூழல் உள்ள பிரதேசம்)
மூளாய் - காரைநகர் பேருந்துப் பாதையில் அமைந்துள்ளது.

077 161 1853 / 0044 7912 943 982

(cs.54787) (N-1)

## Sale



Used three function patient bed manual with rexine mattress Used for only 4 months
Contact:- 077 331 5413 , Manipay.

(CS/54761) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் (V) விசாக நட்சத்திரம் 4 ஆம் பாதம் 33 வயதுடைய Switzerlandல் பிறந்த அரச தொழில் புரியும் மணமகனுக்கு மெல்லிய அழகிய மண மகளை எதிர்பார்க் கின்றோம். 1994 இலிருந்து 1999 இற்குள் பிறந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 998 6437

(cs.54765) (N-1)

## பழைய மாணவர் சங்கம்
## அங்குரார்ப்பண வைபவமும்
## பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் தெரிவும்


மேற்படி எமது பாடசாலைக்கான தனியான பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வும் பழைய மாணவர் சங்க தெரிவு நிகழ்வும்
**எதிர்வரும் 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலை வளாகத்தில் இடம் பெறவுள்ளதனால் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கற்ற பழைய மாணவர்களும், யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையிலும் கற்ற பழையமாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள்**
அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை**

(cs.42242) (N.1)


# மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 08 . 1940



இறப்பு
19 . 04 . 2024

## கந்தையா மயில்வாகனம்

யாழ். இருபாலை கிழக்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மயில்வாகனம் கடந்த (19-04-2024) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பூமலர் அவர்களின் கணவரும், மதிபரன் (பிரான்ஸ்), துவாரகா, மைதிலி, திரிவேணி, கரிபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீதா (பிரான்ஸ்), சுரேஸ், சாந்தகுமார், தரணிகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமாவும், அக்ஷயா (பிரான்ஸ்), ஆதித்யா (பிரான்ஸ்), சதுர்திகா, சாகித்தியா, சர்வாயினி, ப்ரித்விகா, கருண் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராஜலட்சுமி மற்றும் அன்னலட்சுமி, நாகலட்சுமி,ஜெயலட்சுமி (டென்மார்க்),மகேந்திரராஜா(உரிமையாளர் - லக்கி ஸ்டோர்ஸ், இருபாலைச்சந்தி) ஆகியோரின் அன்புச்சகோதரரும், செல்வராஜா,ரவீந்திரன், திருநாவுக்கரசு (டென்மார்க்), பாமினி (ஆசிரியர் - நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், செல்வேந்திரகுமாரி (ஜேர்மனி), மாவீரன் இராஜேந்திரகுமார், ஜிதேந்திரகுமார் (லண்டன்), செல்வகேந்தினி (வவுனியா), ரவிசாந் (அவுஸ்திரேலியா), ரிஷிகா (நோர்வே), கௌசாம்பிகா (பிரான்ஸ்), தானியா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யதுமிதன், வானதி, பிருந்தாவன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21-04-2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12:00 மணியளவில் இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
(CS/54781) J-1 **மகேந்திரராஜா - 077 498 1014**

# ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## உப அலுவலகம், உடுவில்.
### வட்டாரம் -1 பட்டியோலை வீதி, ஆதன இல 45

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 1 பட்டியோலை வீதியில் அமைந்துள்ள 45 ஆம் இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் S.இராசமுத்து எனும் பெயரில் உள்ளது.

மேற்படி ஆதனம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறையில் அமைந்துள்ள "வக்கம்புராய்" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு, 10 தெற்கெல்லையில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் சுப்பிரமணியம் சிவலோகநாதன் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் 9597ம் இலக்க 04.08.2014ந் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் இவ்வாதனம் சுப்பிரமணியம் சிவலோகநாதன் ஆகிய என்னால் எனது சகோதரி வள்ளிநாயகிக்கு நொத்தாரிஸ் இ.வசந்தசேனன் முகதாவில் 11.08.2002இல் 4810ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி எழுதப்பட்டது. குறித்த வள்ளிநாயகி வழிஉரித்தாளர்கள் இன்றி காலம் சென்றதால் குறித்த ஆதனம் எனக்கு உரித்தும் சொந்தமுமானது ஆகும் என குறித்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.பாலசுப்பிரமணியம் அவர்களால் 18.02.2023 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 1882/2023 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1, 2, 3 என காட்டிய நிலப்பரப்பு 07 குளி 04.54 எனக் காட்டப்பட்டுள்ளது. மேலும் வெளிப்படுத்தல் உறுதியின் நிலப்பரப்பு 10 ஆகும் இதற்கெல்லைகளாக

கிழக்கு :- ஒழுங்கை
வடக்கு :- சுந்தரலிங்கம் ஜெனிற்றா மற்றும் அன்ரன் பெண் தேவமலர்
தெற்கு :- பட்டியோலை ரான்ஸ்போமர் வீதி
மேற்கு :- கந்தசாமி அன்னலட்சுமியின் ஆதனம்

எனவே மேற்குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியான நிலப்பரப்பு 4 குளி 13.54 என்ற நிலப்பரப்பினை செல்லையா மகள் தரணியா மற்றும் மிகுதி ஆதனங்கள் ஏனையோராலும் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனங்கள் பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2024.04.18

**திருமதி சாரதா உருத்திரசாம்பவன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை,**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் இரு பெண்கள் கைது

கொழும்பு, ஏப்.21

2 கோடி ரூபா பெறுமதியான போதைப்ப்பொருள்களுடன் வெளிநாட்டைச் சேர்ந்த இரு பெண்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கினியா நாட்டைச் சேர்ந்த பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் துருக்கி இஸ்தான்புல் நகரத்திலிருந்து டர்கிஷ் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் நேற்றுக் காலை 6 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர்களிடமிருந்து 500 கிராம் நிறையுடைய 40 போதை மாத்திரைகள் கைப்பற்றப் பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் 2 கோடி ரூபா பெறுமதியானது என விசாரணையில் தெரியவந்துள்ளது.

(எ-இ)


## மணமகள் தேவை

1992, யாழ் இந்து (V) ஆயிலியம் கொழும்பில் தனியார் துறையில் கணக்காய்வாளராகப் பணியாற்றும்
**மணமகனுக்கு மணமகள் தேவை.**

**077 669 2415, 076 143 4393**

## விற்பனைக்கு

யாழ் மின்சார நிலைய வீதிக்கு அண்மையில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4 1/2 பரப்பு காணியும், யாழ் வைத்தியசாலை வீதியில் மரக்கறி சந்தைக்கு முன்பாக 25 அடி அகலமும், 200 அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும், யாழ் K.K.S வீதியில் 15 அடி அகலமும் 300 அடி நீளமும் கொண்ட கடையும், யாழ் பிறவுண் வீதியில் 5பரப்புக் காணியும், யாழ் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 2 1/2 பரப்புக் காணியும், யாழ் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 5பரப்பு காணியும், யாழ் வைத்தியசாலைக்கு முன்பாக காந்தி வீதியில் 4 3/4 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

(CS 00294) (S-1)

தொடர்பு: **077 723 2535**

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
**இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை [பெண்]

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கோ அல்லது உதவியாளர்களாகவோ வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ள முடியும்.

(cs54784) (N-1)

**076 363 1895**

## விற்பனைக்கு

**JCB 3CX**
மற்றும் **3DX**
பெக்ஹோ



இயந்திரங்களுக்கான
Bucket Tooth, Side Cutters, Cutting Edges மற்றும் Bolts & Nut
விற்பனைக்கு.

இன்றே அழையுங்கள் - **076 310 7534**

(CS.28457) (n-1)

## வேலையாள்கள் தேவை

➤ சாரதி - Ad லைசன்ஸ் உள்ள சாரதி.
➤ லொறியில் பெயின்ட் ஏற்றி கடைகளுக்கு விநியோகிக்க லேபர் தேவை.
➤ A/L or கொமஸ் படித்துள்ள ஆண்/பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை.
➤ விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) தேவை.

காலை 10.00 மணிக்கு நேர்முகத் தேர்வு கீழ்வரும் முகவரியில் நடைபெறும்.
**கொழும்பு பெயின்ட் சென்ரர்,**
**பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தி, நீர்வேலி.**

தொடர்பு:- **077 789 0398**

## Sri Lanka German Training Institute

SLGTI Sri Lanka German Kilinochchi

Ministry of Education
Skills Development, Vocational Education, Research and Innovation Division

### Renewable Energy Technology

NVQ Level 4, 5 & 6

Based on Green Energy Technology

Applications are called from qualified candidates for the above courses Conducted by the Sri Lanka German Training Institute,Kilinochchi.

**Details**

- **Renewable Energy**
  (Solar Energy, Wind Power, Hydropower, Bioenergy, Wave Power, Energy Monitoring and Control Systems)
- **Applied Mechatronics Systems**
- **Service & Maintenance (Industrial Machinery)**
- **Innovation, R&D Projects**

- **Day and Time** : Weekdays from 08:30 to 16:15
- **Time Duration** : 4 Years (2 Years Institutional Training and 2 Years Relevant Industrial Training)
- **Course Fee** : 150,000 LKR (Per Year) (Bank Loan will be provided for the second, third & fourth year)
- **Qualification** : Successfully Completed G.C.E O/L (Including Mathematics, Language with 6 Subjects in one attempt)

**APPLICATION FORM**

Scan the QR code and download the application form National Diploma in Technology pdf. Please fill out the application and send it to the address provided below.

Principal–Sri Lanka German Training Institute, Ariviyalnagar, Kilinochchi.

Tel : 0214927799, 0703060138

Email :sao@slgti.com Web: www.slgti.ac.lk

## முதியோர், நோயாளர் பராமரிப்புச் சேவை

Jaffna Doctor

For Your Loved Ones

- பராமரிப்பாளர் சேவை
- தாதியர் சேவை
- மருத்துவ பரிசோதனை
- குருதிப் பரிசோதனை
- அம்புலன்ஸ் சேவை
- சலக் குழாய் மாற்றுதல்
- சத்திர சிகிச்சையின் பின் பராமரிப்பு
- நீண்டகால புண்களுக்கான பராமரிப்பு

முதியோர்களுக்கான நீண்ட கால, குறுகிய கால தங்குமிட சேவைகள், உள வள ஆலோசனை சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **0701348384**

## THE ROYAL COLLEGE OF JAFFNA

**O/L, A/L - கலை, வர்த்தகம்** விரும்பிய பாடங்களை சிறு குழுக்களாக கற்பதற்கு.
தொடர்புகொள்ளவும்.
நிர்வாகி குபேரன் கட்டட மாடி, சங்கானை.

**077 675 1649**

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதிக்கும் - கண்டி வீதிக்கும் அருகில் 1 1/2 பரப்பு வீட்டுடன் காணி உடன் விற்பனைக்குண்டு. (மாடி வீடு கட்டக்கூடிய வசதி அமைப்பு கொண்டது. விலை 3 கோடி எண்பது லட்சம் (தரகர் வேண்டாம்)

**077 855 6382, 077 408 0578**

## வாடகைக்குண்டு

கச்சேரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்குண்டு.
அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்தது.

(cs54748) (2.6)

**077 061 5691**

## வீடு வாடகைக்கு உண்டு

ஆனைப்பந்தியில் 7 அறை. 3 களஞ்சியசாலை. வாகனத்தரிப்பிடங்கள் ஆகிய சகல வசதிகளுடனும் கூடிய
**விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.**
அலுவலக. களஞ்சிய. நிறுவன பாவனைக்கு உகந்தது. தரகர் தேவையில்லை.

(CS/54789) J-1

தொடர்பு:- **077 259 5672**

## மணமகள்கள் தேவை

யாழ். இந்து (V), 1992, அவிட்டம், 4 ஆம் செவ்வாய், உத்தியோகம், 1993, ஆயில்யம், உத்தியோக மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை.

தொடர்பு:- **077 964 9245**

## வீட்டில் 2 Rooms வாடகைக்குண்டு

சுண்டுக்குளி பழைய பூங்காவில் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீட்டில் இரண்டு அறைகள் வாடகைக்கு விடப்படும். நேரில் பார்த்து பேசிக் கொள்ளலாம்.
சிறு குடும்பம் விரும்பத்தக்கது.

மேரி [illegible]

**T.P.: 077 777 7384**

## அலுவலக உதவியாளர் தேவை (Peon)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
தொடர்புகளுக்கு:-
யாழ் வணிகர் கழகம்.
இல- 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
email :- jaffnachamberofcommerce@gmail.com

**076 575 4993, 077 723 8629**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# சன்ரைஸஸ் காட்டடி

**டில்லி மைதானம் நேற்று சிக்ஸர் மழையில் நனைந்தது. சன்ரைஸஸ் அதிரடியில் வெளுத்துவாங்க, பதிலுக்கு டில்லியும் தூள் கிளப்ப ரசிகர்களுக்கு ஆட்டம் விருந்தானது. இருந்தாலும் டில்லி தனது சொந்த மைதானத்தில் 67 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.**

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. ஹெட் அபிஷேக் சர்மா இணை களத்துக்குள் நுழைந்தது. டில்லியின் பந்து வீச்சை சிக்ஸர்களாக பறக்கவிட்டது இந்த இணை. 16 பந்துகளில் ஹெட் அரைச்சதம் கடந்தார். அபிஷேக் சர்மாவும் அதிரடியில் சரவெடி காட்டினார். 12 பந்துகளில் 46 ஓட்டங்களைக் குவித்த நிலையில் குல்தீப்பின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அவர் ஆட்டமிழக்கும்போது 6.2 பந்து வீச்சில் சன்ரைஸஸ் அணி 131 ஓட்டங்களைக் குவித்திருந்தது. தொடர்ந்து நுழைந்த மார்கம் ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே ஹெட்டின் இலக்கை குல்தீப் சரிக்க சன்ரைஸஸ் நெருப்பு ஓட்டவேகம் கட்டுக்குள் வந்தது. ஹெட் 32 பந்துகளில் 89 ஓட்டங்களுடன் வெளியேறினார். இந்த இணையின் அதிரடியில் 20 பந்துப் பரிமாற்றங்களில் சன்ரைஸஸ் 350 ஓட்டங்கள் குவிக்கும் நிலைமை காணப்பட்டது. இருப்பினும் தொடர்ந்து வந்தவர்களில் சஹாப் அஹமட் மாத்திரம் வெளுத்து வாங்கினார். இறுதி வரையில் ஆட்டமிழக்காமல் 29 பந்துகளில் 59 ஓட்டங்களைக் குவித்தார். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களை அந்த அணி குவித்தது. குல்தீப் 55 ஓட்டங்களை வாரி வழங்கி 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.



பிரமாண்ட இலக்கை விரட்ட ஆரம்பித்த டில்லி அணிக்கு ப்ரித்திவி சா அதிரடி காட்டினார். ஆனாலும் 5 பந்துகளில் 16 ஓட்டங்களுடன் அவரை பவிலியனுக்கு அனுப்பினார் வோசிங்டன் சுந்தர். டேவிட் வோனரும் ஓர் ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். ஆனாலும் டில்லியின் ஜேக் ப்ரேஸர், சன்ரைஸஸின் ஆட்டத்தை தூக்கி விழுங்கிச் சாப்பிடும் அளவுக்கு மாஸ் காட்டினார். அவரது துடுப்பில் பட்ட பந்துகளில் எல்லைக்கோட்டைத்தாண்டி எகிறி விழுந்தன. 15 பந்துகளில் அரைச்சதம் கடந்து டில்லிக்கு நம்பிக்கையளித்தார். அதை மயன் மார்கண்டே முடித்து வைத்தார். 18 பந்துகளில் 65 ஓட்டங்களுடன் அவரை ஆட்டமிழக்கச் செய்ய டில்லி அடங்கியது. அபிஷேக் போரல் 22 பந்துகளில் 42 ஓட்டங்களுடன் மார்கண்டே பந்து வீச்சில் பவிலியின் திரும்ப ஆட்டம் முழுவதுமாக சன்ரைஸஸ் வசம் சென்றது. ரிஷப் பந் முயற்சித்தாலும் ஆட்டம் அவர் வசம் இருக்கவில்லை. இறுதியில் 19.1 பந்துப் பரிமாற்றங்களில் 199 ஓட்டங்களுக்கு அந்த அணி சகல இலக்குகளையும் இழந்தது. பந்த் 35 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நட்ராஜன் ஓர் ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றம் உள்ளடங்கலாக 4 பந்துப் பரிமாற்றங்களை வீசி 19 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 4 இலக்குகளைச் சரித்தார். இந்த வெற்றியுடன் சன்ரைஸஸ் அணி புள்ளிப்பட்டியலில் 2ஆம் இடத்தைப் பிடித்தது. (ஒ-5)



சாவகச்சேரி புகையிரத நிலைய வீதி, தேவர்புலம் ஆவரம்சாட்டி முருக மூர்த்தி கோயில் குடமுழுக்கு கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது.
(ப-9)


## வேலையாட்கள் தேவை

சைவ உணவகத்திற்கு
கொத்துறொட்டி
வேலை தெரிந்தவர்கள்
உடனடித் தொடர்பு
கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
076 423 6862

## யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் சாவகச்சேரி

பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணப்
பொதுக்கூட்டம்

காலம்:- 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.00 மணி
இடம்:- வித்தியாலய பிரதான மண்டபம்
தலைமை:- திரு.ம.லினாஷ்குமார் (அதிபர்)
பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி
வித்தியாலயம்

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றுக்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1.பாதுகாவலர் (Security):- தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. இத்துறை சார்ந்த குறைந்தது ஒரு வருட அனுபவம் அவசியம் மற்றும் வயது எல்லை:- 20-50

2.வரவேற்பாளர் (Receptionist):- தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. அடிப்படைக் கணினி அறிவு மற்றும் குறைந்தது ஒரு வருட அனுபவம் அவசியம்.

3.தோட்ட பராமரிப்பாளர்:- இத்துறை சார்ந்த அனுபவம் விரும்பத்தக்கது. (வயது எல்லை:- 20-50)

077 251 4981, 077 872 9806
நேரில் சமுகம் தரவேண்டிய முகவரி:
195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(195, Temple Road, Nallur, Jaffna)

## வீடு வாடகைக்கு

யாழ். நகரை அண்டிய பகுதியில் 02 வீடுகள் வாடகைக்கும், கடைகள், களஞ்சியசாலைகள், மாணவர்களுக்கான தனி அறைகள் மற்றும் சுற்றுலாவிகளுக்கான அறைகள், வீடுகள் எம்மிடம் உண்டு.
077 34 500 39, 077 34 800 39

## பணிப் பெண் தேவை

யாழ். நகரில் வீட்டையும், தனியொருவரையும் பார்த்துக்கொள்வதற்கு பணிப்பெண் தேவை.
குடும்பப் பொறுப்பற்றவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 34 500 39, 077 34 800 39

## வேலையாட்கள் தேவை

மில் வேலை தெரிந்தவர்கள், சாரதிகள்,
கூலியாட்கள்
மாப்பியன் மில்
சுதுமலை, மானிப்பாய். 077 77 222 15

## வேலைவாய்ப்பு மற்றும் அறை வாடகைக்கு

ஆண், பெண் இருபாலாருக்கும்
வேலைவாய்ப்பு, அத்துடன்
அறைகளும் வாடகைக்கு உண்டு.
T.P:0777 242427, 0777 412713


## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 10 . 1943



மறைவு
20 . 04 . 2024

### திருமதி கதிர்காமத்தம்பி லீலாவதி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கலட்டி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமத்தம்பி லீலாவதி அவர்கள் நேற்று (20.04.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவநாதன் - சிவபாக்கியம் தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, புஸ்பவதி மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலட்டி வீதி, வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42256)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் தேசத்தில்...

இலங்கையில் கட்டமைத்த இனவழிப்பும் தமிழ் மக்களின் இன சுத்திகரிப்பும்' என்ற ஆங்கிலமொழியில் அமைந்த நூல் நல்லூரிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமாலை வெளியிடப்பட்டது. இதன்போது விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் ஆவணங்களாக இதுவரையில் இரண்டு முக்கியமான ஆவணங்கள் வெளிவந்துள்ளன. முதலில் 30 வருட அஹிம்சை வழிப் போராட்டத்தின் பின்னர் 1976ல் வெளியிடப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரகடனம். அடுத்து 30 வருட ஆயுதப் போராட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட வடமாகாணசபையின் 2015ஆம் ஆண்டின் இனவழிப்புத் தீர்மானம். தற்போதைய நூல் மேற்கண்ட இரு ஆவணங்களின் தொடர்ச்சியாகவே வெளியிடப்படுகின்றது.

இதன் உள்ளடக்கங்களை வாசித்து அறிபவர்கள் ஓரளவு எம் மக்களுக்கு இதுவரை நடந்த அநியாயங்களை, அட்டூழியங்களை புரிந்து கொள்வார்கள். எமது இந்த நூலின் குறிக்கோள் நடந்தவற்றைத் தெரியப்படுத்தலும் தெளிவான நடவடிக்கைகளை உலக அரங்கில் ஏற்படுத்துவுமாவன. சிங்களவர், தமிழர், புலம்பெயர்ந்தோர், சர்வதேச மக்களும் நிறுவனங்களும், அண்மைக்காலங்களில் இலங்கையில் நடந்தேறியவை எவை, யார் அவற்றின் சூத்திரதாரிகள், அவற்றை எவ்வாறு அவர்கள் நடத்தியுள்ளார்கள் என்று அறிந்து கொள்ளும் வகையில் அத்தியாயங்களை ஒழுங்குபடுத்தி தற்போதைக்குக் கிடைத்த விவரங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளார் ஆசிரியர். மக்கள் யாவர்க்கும் எமக்கு நடந்தவற்றை நடப்பவற்றை தெரியப்படுத்தல் இதன் நோக்கம். பலர் நடந்தவற்றை அறியாமலேயே தமது கருத்துகளைத் தெரிவிப்பார்கள். அது தவறு. இந்நூலைப் படித்துவிட்டு அவர்கள் தம் கருத்துகளை வெளியிடட்டும்.

அடுத்து பொறுப்புக்கூறல், நீதியைப் பெறுதல், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசத்துக்கு எடுத்தியம்பி வலியுறுத்தி எமக்கான பொது மக்கள் வாக்கெடுப்பை உறுதி செய்வது போன்றவையே எமது நோக்கம்.

பொதுவாக்கெடுப்பை தாமதமின்றி இயற்றுதல் அவசியம். ஏற்கனவே தமிழர்களின் வடக்கு - கிழக்கு பாரம்பரிய இடங்கள் பல பறிபோய் வேற்று இனத்தவர் அங்கு குடிகொண்டுள்ளார்கள். இங்கு நடக்கும் அரச மற்றும் அரச சார்பு படைகள் மற்றும் வேற்று இனத்தவர்களின் நடவடிக்கைகளினால் எமது மக்கள் பலர் வெளிநாடுகளைத் தஞ்சமடைந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியே போனால் வாக்காளிக்க தமிழ்மக்கள் இவ்விருமாகாணங்களிலும் மிகவும் குறைந்துவிடுவார்கள். இதை எண்ணியே இந்நூலை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும் புலம்பெயர் எமது உறவுகளுக்கும் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம். இவ்வாறான ஒரு கைநூல் தமிழ் மக்கள் தமக்கு நேர்ந்த அவலங்களை அறிந்து கொள்ள மிகவும் உதவுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் நாம் மூன்று பரிமாணங்களில் இருந்து நடப்பவற்றை நோக்க வேண்டியுள்ளது. பூகோளம் சார்ந்த கோணம் அடுத்து முழு இலங்கையினதும் பரிமாணக் கோணம். கடைசியாக வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் தற்போதைய நிலை பற்றிய கோணம்.

உலகம் மூன்றாவது உலக மகா யுத்தத்தை எதிர்நோக்கியுள்ளது. எம்மைப் பற்றி சர்வதேசம் வெகுவாகக் கரிசனை காட்ட முடியாத நிலையே பூகோளப் பரிமாணமாக இன்று உள்ளது. ஆனால் அவர்களுக்கு இங்கு நடந்தவற்றை, நடப்பவற்றைக் கூறிக் கொண்டேயிருக்க வேண்டும். அவ்வாறு கனடா நாட்டில் எம்மவர் அறிவுறுத்தலின் மேல் அறிவுறுத்தல் கொடுத்துக் கொண்டு இருந்ததால்தான் இன்று அந்நாடு எமக்கு நடந்தவற்றை உலக அரங்கில் எடுத்துக்கூறும் நிலை ஏற்பட்டுள்ளது. அதே போல் நாம் பூகோளச் சமூகத்துக்கு எம்மைப் பற்றிய விவரங்களைத் திரட்டி அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் எம் நாடு வங்குரோத்து நிலையை அண்டித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. எம்மைப் பற்றியும், எமது பிரச்சினைகள் பற்றியும் மத்திய அரசாங்கம் பட்டும் படாமலேயே கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் தமிழர் பற்றிய யதார்த்த நிலையை எடுத்தியம்பும் எமது இந்த நூல் சிங்களத் தலைவர்கள், முக்கியமாக படித்த இளம் தலைமுறைகள், எம்மைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பு அளிக்க வல்லதாக உள்ளது. எம்மைப் பற்றிய மூன்றாவது பரிமாண நிலையில் இருந்து பார்த்தோமானால் இன்றைய படித்த தமிழ் இளைஞர், யுவதிகள் அண்மைக் காலங்களில் தமது உள்ளூர் உறவினர்களுக்கு நேர்ந்த கதியை அறிந்து கொள்வது அத்தியாவசியமாகின்றது. அவர்களுக்கு அறிவூட்டும் விதமாக இக் கைநூல் அமைந்துள்ளது- என்றார். (அ-ஓ.5)

## பேராசிரியராக...

ராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே, இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் இந்து நாகரிகத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்படுவதற்கு பேரவை ஒப்புதலை வழங்கியது. (அ-ஓ.5)

## வடக்கு....

களை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். அதற்கு அதிகாரிகளின் நேர்மையான செயற்பாடுகள் அவசியம் என ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

நோயாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து கரிசனையுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு சுகாதார அதிகாரிகளிடம் காணப்படுவதாகவும், கொள்கைகளை பின்பற்றி அதிகாரிகள் செயற்பட வேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார். மத்திய அரசாங்கத்திலிருந்து ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளதாகவும் ஆளுநர் இதன்போது கூறினார். தரமான சிறந்த சுகாதார சேவையை உறுதி செய்து, அதனை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்-என்றுள்ளது. (அ-ஓ.5-26)

## கடலட்டைகளுடன்...

முகாம் அழைத்துவரப்பட்டு விசாரணைகளின் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-ஓ-27)

## விருந்தினர்....

அண்மைக்கால தரவுகளின்படி விருந்தினர் விசாவில் செல்வோரின் எண்ணிக்கையில் மிகப்பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனடாவில் விருந்தினர் விஸா தொடர்பில் எந்த வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. தொடர்ந்தும் அந்த நடைமுறை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் ஏற்கனவே கனடா சென்றவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் புதிதாகச் செல்ல தமிழர்கள் அச்சப்படுகின்றனர். கனடாவில் வேலைவாய்ப்பின்மை, வாடகை வீடுகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி என்பன இதில் முக்கியமானவையாகும். பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து கனடா சென்ற தமிழர்கள் அங்கு வாழ முடியாது என்பதை உணர்ந்த நிலையில் மீண்டும் இலங்கை திரும்பியுள்ளனர். (அ-ஓ.இ)

## உயர்....

தற்போதைய பீடதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசனின் பதவிக்காலம் எதிர்வரும் 26ஆம் திகதியு டன் நிறைவடையவுள்ள நிலையில், புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

பீடாதிபதித் தெரிவுக்காக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், கணக்கியல் துறை மூத்த பேராசிரியருமான தி.வேல்நம்பி, விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கு.வேலாயுதமூர்த்தி மற்றும் விலங்கியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் க.கஜபதி ஆகியோர் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

பீடாதிபதி தெரிவுக்கு ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்களின் சுயசமர்ப்பணம் இடம்பெற்றது. இதன்போது இரண்டு பேராசிரியர்களே சுய சமர்ப்பணத்துக்கு வருகை தந்திருந்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாக்களிப்பின் போது மூத்த பேராசிரியர் தி.வேல்நம்பி வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் முதனிலை பெற்று உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்கு உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதியாகச் செயற்படுவார். (அ-ஓ-5-66)

## ஈஸ்டர்...

கையிலுள்ள தேவாலயங்களிலும், சுற்றுலாவிகள் தங்கியிருந்த ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் தற்கொலை தாக்குதல்கள் காலை 8.25க்கும் 9.25க்கும் இடையில் நடத்தப்பட்டன. இதில் 39 வெளிநாட்டவர்கள் உட்பட 253 பேர் உயிரிழந்ததுடன் 400பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

முதலாவது தாக்குதல் கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற புனித கொச்சிக்கடை அந்தோனியார் கத்தோலிக்கத் தேவாலயத்தில் காலை 8.25 மணிக்கு நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் 50க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது தாக்குதல் கொழும்பின் வடக்கே கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி புனித செபஸ்தியார் கத்தோலிக்கத் தேவாலயத்தில் காலை 8.45 மணிக்கு நடத்தப்பட்டது. இதில் குறைந்தது 93பேர் கொல்லப்பட்டனர்.

மூன்றாவது தாக்குதல் மட்டக்களப்பு நகரில் உள்ள சீயோன் தேவாலயம் மீது காலை 9.05 மணிக்கு நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் குறைந்தது 27 கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் ஞாயிறு பாடசாலையில் பயின்று வந்த சிறுவர்கள்.

### தங்கும் விடுதிகள்

ஷங்கிரிலா விடுதியில் காலை 8:57 மணிக்கு குண்டுவெடிப்பு நடைபெற்றது. விடுதியின் மூன்றாம் தளத்திலுள்ள 'டேபிள் ஒன்' என்ற உணவகத்தில் பெரும்பாலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நிறைந்திருந்த காலை உணவு நேரத்தில் தாக்குதல் நடந்தது.

சினமன் கிராண்ட் விடுதியில் காலை 9.15 மணிக்கு தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது. காலை உணவுக்காக வரிசையில் நின்றவர்களுடன் இணைந்து தற்கொலைதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார். இத்தாக்குதலில் அங்கு நின்றிருந்த உணவக முகாமையாளர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

கொழும்பிலுள்ள உலக வரத்தக மையத்துக்கு அருகிலுள்ள கிங்ஸ்பரி நட்சத்திர விடுதியில் காலை 9.25 மணிக்கு தாக்குதல் இடம்பெற்றது. இதில் வெளிநாட்டவர் கள் அதிகமாகக் கொல்லப்பட்டனர்.

தாக்குதல்களுக்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியது. ஆனாலும் இந்தத் தாக்குதல் தொடர்பில் முற்கூட்டிய தகவல் கிடைத்தும் தடுக்க நடவடிக்கை எடுக்க இலங்கை தவறியிருந்தது. இந்த நிலையில் இந்தத் தாக்குதல் அரசியல் ஆதாயத்துக்காக - கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகுவதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதுவரைதாக்குதலுக்கான உண்மையான சூத்திரதாரி கண்டறியப்படவில்லை என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.5)

## ஈஸ்டர் தாக்குதல் யோசனைகளை திருச்சபை இன்னும் ஏற்கவில்லை

### அருட்தந்தை சிறில் காமினி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.21

ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் சமர்ப்பித்துள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான யோசனைகளை கத்தோலிக்க திருச்சபை இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை என அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் தங்கள் யோசனைகளை சமீபத்தில் சமர்ப்பித்திருந்தன. அவர்களின் யோசனைகளை நாங்கள் ஆராய்ந்த பின்னரே அதனை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும். கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் இரண்டு கட்சிகளும் யோசனைகளை சமர்ப்பித்துள்ளனர் என்பது உண்மை. ஆனால் அதன் அர்த்தம் நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்பதில்லை - என்றார். (எ-இ)



## பருத்தித்துறையில் வெடிபொருள்கள் மீட்பு!

பருத்தித்துறை, ஏப். 21

கற்கோவளத்தில் உள்ள காணியில் நேற்று சனிக்கிழமை கிடங்கு வெட்டிய போது வெடிபொருள்ள் தென்பட்டன. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு சென்ற பருத்தித்துறை பொலிஸார் ரி-56 ரக மகஸின்கள் 37 மற்றும் ஏ. கே.எல். எம்.ஜீ. மகஸின் ஒன்றையும் மீட்டுள்ளனர். (ஓ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்தில் இளைஞன் காயம்

பருத்தித்துறை, ஏப். 21

பருத்தித்துறையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயங்களுக்குள்ளான இளைஞன் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளான்.

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த தங்கவேல் விக்னேஸ்வரன் (வயது - 32) என்ற இளைஞன் படுகாயங்களுக்கு உள்ளானான். இதையடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளான். (ஒ-100)



நானாட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில், 'நிலைபேறான வீட்டுத்தோட்டம்' நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்பட்ட, விதைகள் மற்றும் நாற்றுகள் வழங்கும் நிகழ்வு, நானாட்டான் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-56)

# நகை, பணம் திருட்டு

பளை, ஏப். 21

பளை - இந்திராபுரத்தில் இரு வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

பணம், தங்க நகைகள் மற்றும் அலைபேசிகள் திருட்டுப் போயுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதிகாலை 2.30 மணிவரை படித்த பிள்ளைகளுக்காக விழித்திருந்த பின்னர் வீட்டார் படுக்கைக்குச் சென்றதாகவும் அதன் பின்னர் நுழைந்த திருடர்கள் நித்திரையாக இருந்தவர்களைக் கடந்து சென்று அங்கு கைப்பை மற்றும் சேர்ட் பொக்கற் ஆகியவற்றில் வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் ரூபா பணம், இரண்டு சோடி தோடுகள் மற்றும் அலைபேசிகள் ஆகியவற்றையும் திருடியுள்ளனர்.

இன்னொரு வீட்டில் ஓர் அறையில் படுத்திருக்க மற்ற அறையினுள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பொருள்களை சல்லடை போட்டுத் தேடி பணம் மற்றும் உண்டியல் போன்றவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். (ஒ-9)

# கட்டுமானப் பொருள்களுக்கு விரைவில் விலைச் சூத்திரம்

கொழும்பு, ஏப்.21

கட்டுமானப் பொருள்களுக்கான விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்த வர்த்தக அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

கட்டுமானப் பொருள்கள் தன்னிச்சையான விலையில் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது .

கட்டுமானப் பொருள்களின் விலை உயர்வால், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (எ-இ)


**வீடு வாடகைக்கு உண்டு**

நவாலி வடக்கு மானிப்பாயில்
3 அறைகளுடன் கூடிய
**வீடு வாடகைக்கு உண்டு.**
தரகர் தேவை இல்லை.
(CS/54785) J-1
077 492 7490, 071 856 [illegible]

**வீடு வாடகைக்கு**

நல்லூர் சங்கிலியன் வீதியில்
2 அறைகள், Attach Bathroom,
வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய
**வீடு வாடகைக்கு உண்டு.**
(CR/422251) J-1
தொடர்பு:- 076 699 4694

**கடை விற்பனைக்கு**

183 KKS வீதி, யாழ்ப்பாணம் - சத்திர
சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள
1 1/4 பரப்புக் **கடை விற்பனைக்கு உண்டு.**
Toylet, குடிநீர் கிணறு ஆகிய
வசதிகளும் உண்டு.
(CS/54777) J-1
தொடர்பு:- 077386 6250

**காணி விற்பனைக்கு**
(மாம்பழம் சந்தி)

மாம்பழம் சந்தியில் இருந்து
250m தூரத்திற்குள் 2 பரப்புக்
**காணி விற்பனைக்கு உண்டு.**
தொடர்பு:- 077 890 0142

**காணி விற்பனைக்கு**
(கச்சேரி East Lane)

**கச்சேரி (East Lane) இல் அமைந்துள்ள**
**1 பரப்புக் காணியும், 1.5 பரப்புக்**
**காணியும் விற்பனைக்கு உண்டு.**
சென்ஜோன்ஸ் School இற்கும் சுண்டுக்குளி
Ladies School இற்கும் காணியில் இருந்து 1Km
(CS/54776) J-1
தொடர்பு:- 077 890 0142

**மணமகன் தேவை**

யாழ். இந்து, கௌரவ குடும்பம் (V)
1993, அவிட்டம், 2ல் செவ்வாயில்
பிறந்த சிவில் பொறியியலாளர்
மணமகளிற்கு பொருத்தமான
வரனை எதிர்பார்க்கின்றோம்.
(CS/54770) J-1
077 970 9065, 021 221 9043

**விற்பனைப் பிரதிநிதி தேவை**
**(Sales Rep)**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் மென்பானம் மற்றும்
உணவு உற்பத்தி விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு
**விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) தேவை.**
முன் அனுபவம் விரும்பத்தக்கது.
சம்பளம் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.
வயது எல்லை 25 - 45 வரை.
(CS/54790) J-1
077 583 3045, 075 466 5555, 021 221 3788

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு
அண்மையில் இயங்கும் Printers ஒன்றிற்கு
Typing, Printing Photocopy வேலைக்கு
வேலையாள்கள் (பெண்) தேவை.
பழக ஆர்வமுள்ளவர்களும்
தொடர்புகொள்ளலாம்.
(cs.54752) (N-1)
077 194 1964 / 077 973 1868

**சிறுநீரகம் தேவை**

**18 வயதுடைய தந்தையை இழந்த சிறுவன்**
**ஒருவனுக்கு O+, B+ இரத்தவகையைச்**
**சேர்ந்த சிறுநீரகம் தேவை.**
**சிறுநீரகத்தை வழங்க விரும்புபவர்கள்**
தொடர்பு கொள்ளவும்.
(CS/54786) J-1
070 130 1858, 076 173 7711

**தேவை**

புடைவைக் கடைக்கு
அனுபவமுள்ள பெண்கள்
வேலைக்குத் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
**இடம் : கொக்குவில்**
தொடர்பு: 077 351 4774

**பண்ணை வேலைக்கு ஆள் தேவை**

சம்பளமாக சுமார் 55,000/
வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும்
EPF & ETF முழுவதும்
எம்மால் கட்டப்படுவதுடன் உணவும்
எம்மால் வழங்கப்படும்.
(தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத
விடுமுறையில் வீடு சென்று வரலாம்.)
தொடர்புகளுக்கு:
077 127 8122

**காணி விற்பனைக்கு**

கல்வியங்காடு G.P.S. மைதானத்திற்கு அண்மையில் 2 பரப்பு, 1 1/2 பரப்பு துண்டுகளாக பிரிக்கப்பட்டு 12 அடி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.
(CS 300) A-1
தொடர்புகளுக்கு: 077 62 44 789

**வீடு வாடகைக்கு உண்டு**

**இருபாலைச் சந்திக்கு அருகாமையில்**
**வீடு வாடகைக்கு உண்டு.**
076 185 1503

**மணமகன் தேவை**

1988 இல் பிறந்த கனடாவில் வசிக்கும்
விவாகரத்தான மணமகளுக்கும், 1994
இல் பிறந்த கனடாவில் வசிக்கும்
மணமகளுக்கும் மணமகன் தேவை.
தொடர்பு:- 075 910 6973

**காணி விற்பனைக்கு**

ஆவரங்கால் பத்தாம் கட்டை, வங்கி
வீதியில் இருந்து 400m தொலைவில்
வீதியை முகப்பாகக் கொண்ட
**10 பரப்பு செம்மண் தோட்டக்காணி**
**விற்பனைக்கு உண்டு.**
தரகர் தேவையில்லை.
(CR/42245) J-1
தொடர்பு:- 076 701 8181

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை**
**சுவாமியார் வீதியில்**
அந்தோனியார் கோவிலில் இருந்து
350m தூரத்தில்
**3 பரப்புக் காணியுடனான**
**வீடு விற்பனைக்கு உண்டு.**
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)
(CS/54628) J-1
தொடர்பு:- 077 614 6434

**அலுவலக உதவியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் தனியார் நிறுவனம்
ஒன்றிற்கு **அலுவலக உதவியாளர் தேவை.**
**கணினி அறிவு, ஆங்கில அறிவு, A/L**
**வர்த்தகப்பிரிவில் கற்றிருத்தல் / வர்த்தகம்**
தொடர்பான கற்கைநெறியைக் கற்றிருத்தல்
மற்றும் **1 வருட முன் அனுபவம்**
விரும்பத்தக்கது. சுயவிபரக் கோவையை
பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
**bestchilleng@gmail.com**
**Best Chill Engineering (Pvt) Ltd**
Dutch Rd, Irupalai, Jaffna
077 403 4455

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் கச்சாய் வீதி
(J/27 இல்) 09 பரப்புக் காணி
தென்னை, தோட்டப்பயிர்ச்
செய்கைக்கு ஏற்ற காணி
விற்பனைக்குண்டு.
T.P.: 077 209 7055

**வீடு விற்பனைக்கு**

சுண்டிக்குளி, விதானையார்
வீதியில் 3 1/2 பரப்புக்
காணியில், சகல வசதிகளையும்
கொண்ட வீடு
விற்பனைக்கு உண்டு.
(CS/54629) J-1
077 614 6434




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

"எதையேனும் சார்ந்திரு
கவித்துவம், தத்துவம், காதல்
இங்கிதம், சங்கீதம் இப்படி
எதன் மீதேனும் சாய்ந்திரு
இல்லையேல்
உலகம் காணாமல் போய்விடும்"
- வண்ணநிலவன்

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை (21.04.2024) சிகரம் : 197

# தமிழ்ப் பொதுவேட்பாளர்: பயங்களும் பதில்களும்



○ நிலாந்தன்

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ்வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கை கடந்த 15 ஆண்டுகளில், அதிகம் பேசுபொருளாக மாறியிருப்பது இந்தமுறைதான். அது ஒன்றுக்கு மேற்பட்ட தரப்புகளால் முன்னெடுக்கப்படுவதும் இந்த முறைதான். அதுமட்டுமல்ல, அது அதிகம் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் ஆபத்துகள் நிறைந்திருப்பதும் இந்த முறைதான்.

இந்தக் கோரிக்கையை கோட்பாட்டு ரீதியாக முதலில் முன்வைத்தவர் மு.திருநாவுக்கரசு. இந்தக் கோரிக்கையை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு விளங்கிக் கொள்ளாமல் பிரயோகித்தவர்கள் குமார் பொன்னம்பலமும் சிவாஜிலிங்கமும் ஆவர்.

மு.திருநாவுக்கரசு 2010ஆம் ஆண்டு, அதாவது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த அடுத்த ஆண்டு ஒரு இணையத்தளத்தில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஏன் நிறுத்தவேண்டும் என்று கட்டுரை எழுதினார். ஆனால் அந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தரப்பு ராஜபக்சக்களுக்கு எதிராக வாக்களிப்பதாக நினைத்துக் கொண்டு, அதே ராஜபக்சக்களின் ஆணையை முன்னெடுத்த தளபதி சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள்.

திருநாவுக்கரசுவின் கட்டுரையை யாரும் பொருட்படுத்தவில்லை. பின்னர் 2015ஆம் ஆண்டும் திருநாவுக்கரசு அதே கட்டுரையை சிறு மாற்றங்களோடு அதே இணையத்தளத்தில் எழுதினார். அப்பொழுது ஆட்சிமாற்ற அலை வீசியது. ராஜபக்சக்களைத் தோற்கடிப்பதற்காக ரணில், மைத்திரி கூட்டு ஒன்றை மேற்கு நாடுகளும் இந்தியாவும் சேர்ந்து உருவாக்கின. அப்பொழுதும் தமிழ்மக்கள் ராஜபக்சக்களுக்கு எதிராக வாக்களிப்பதாகக் கருதிக்கொண்டு இறுதிக்கட்டப் போரில் தற்காலிகமாக பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள். திருநாவுக்கரசு இரண்டுக்கும் மேற்பட்ட தடவைகள் அதுதொடர்பாக எழுதிய பின்னரும் தமிழ் அரசியல் சமூகம் அது தொடர்பாகக் கவனத்தில் எடுக்கவில்லை.

**அதிகம் பேசப்படுகின்ற தமிழ்ப் பொதுவேட்பாளர்**

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வந்த பொழுது தமிழ் மக்கள் பேரவை ஒரு சுயாதீனக் குழுவை உருவாக்கியது. அந்தக் குழு ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எல்லாக் கட்சிகளையும் சந்தித்தது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்திருந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அது தொடர்பாக தெளிவான பதில்களைக் கூறவில்லை. கோத்தபய தனது அமெரிக்கப் பிரஜா உரிமையைத் துறப்பதில் இருக்கும் சட்டச் சிக்கல்களை முன்வைத்து சம்பந்தர் உரையாற்றினார். அதுமட்டுமல்ல, 'ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தினால் அது சிங்கள மக்கள் மத்தியில் இனவாதக் கருத்துகளைத் தூண்ட உதவாதா?' என்றும் அவர் கேட்டார். தமிழரசுக் கட்சி அப்பொழுது தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. கூட்டமைப்புக்குள் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகள் துணிந்து முடிவெடுக்கவில்லை. விக்னேஸ்வரன் அதை ஆதரித்தார். ஐங்கரநேசன், அனந்தி போன்றவர்களும் அதை ஆதரித்தார்கள். எனினும் ஒரு கட்டத்துக்கு மேல் அந்த விடயத்தை செயலுருப்படுத்த தமிழ்மக்கள் பேரவையால் முடியவில்லை. அது உருவாக்கிய சுயாதீனக் குழுவானது அதுதொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டதோடு சரி.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்குப் பல மாதங்களுக்கும் முன்னரே இந்த விடயத்தை முதலில் கையில் எடுத்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். அதன் பின் 'மக்கள் மனு' என்று அழைக்கப்படும் ஒரு சிவில் சமூகம் அதனை முன்னெடுக்கின்றது. அந்த சிவில் சமூகம் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இரண்டு கருத்தரங்குகளையும் நடத்தியிருக்கிறது. அதேசமயம் புலம்பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் இது தொடர்பில் சிந்திப்பதாகத் தகவல்கள் வெளிவந்தன.

விக்னேஸ்வரன் அது தொடர்பாக வெளிப்படையாகவே பேசி வருகிறார். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு அடுத்தபடியாக அவர் இப்பொழுது அதிகமாகப் பேசி வருகிறார். அவர் சிவகுரு ஆதீனத்தின் முதல் வரை அவ்வாறு பொது வேட்பாளராக நிறுத்தலாம் என்றும் ஒரு பரிந்துரையைச் செய்திருந்தார். அதேசமயம் ஈழத்துச் சிவசேனையின் தலைவராகிய மறவன்புலவு சச்சிதானந்தம் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை பொதுவேட்பாளராக சிபாரிசு செய்திருந்தார்.

இவ்வாறாக தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயம் இப்பொழுது மேற்பரப்புக்கு வந்துவிட்டது. அது அதிகம் பேசப்படும் ஒரு விடயமாக மாறிவிட்டது. அதில் பல்வேறு தரப்புகளும் ஈடுபாட்டைக் காட்டுகின்றன. அல்லது அதைக் குழப்புகின்றன.

**தமிழ் வேட்பாளரும் பொதுவேட்பாளரும்**

அவ்வாறு தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவைக் குழப்பும் தரப்புகள் அல்லது அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் தரப்புகள் பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

முதலாவது காரணம், தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவு ஏற்கனவே தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ஒன்று என்பது. குமார் பொன்னம்பலம் சிவாஜிலிங்கம் போன்றவர்கள் அதில் ஏற்கனவே தோல்வி கண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. குமாரும் சிவாஜியும் அதை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு முன்னெடுக்கவில்லை. அவர்கள் தமிழ் வேட்பாளர்களே தவிர தமிழ்த் தரப்பில் பெரும்பாலானவர்களின் விருப்பங்களை பிரதிபலித்த பொது வேட்பாளர்கள் அல்ல.

ஆனால் இப்பொழுது பேசப்படுகின்ற தமிழ்ப் பொதுவேட்பாளர் எனப்படுகின்றவர், தமிழ் மக்களின் தேசிய ஐக்கியத்தின் குறியீடு. இலங்கை அரசாங்கம் நடத்தும் ஒரு தேர்தலையே தமிழ்மக்கள் மறைமுக பொதுசன வாக்கெடுப்பாக மாற்றலாமா என்ற ஒரு ஜனநாயகப் பரிசோதனை அது. தமிழ்ப் பொதுவேட்பாளர் தேர்தலில் வென்று ஜனாதிபதியாக வரப் போவதில்லை. ஆனால் பெருமளவுக்கு தமிழ் வாக்குகளை அவர் திரட்டும் பொழுது, அவர் தமிழ்க் கூட்டு மனச்சாட்சியின் குறியீடாகப் பார்க்கப்படுவார். தமிழ்ப் பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவார் என்ற கற்பனையோடு யாரும் தமிழ் வேட்பாளரை நிறுத்தவில்லை. அவர் சிங்கள வேட்பாளர்களின் வெற்றியை சோதனைக்கு உள்ளாக்குவார் என்ற ஒரு வாய்ப்பு அதில் உண்டு. அதைவிட முக்கியமாக, அவர் தேர்தலில் வெல்லப் போவதில்லை. ஆனால் அவர் தமிழ் மக்களை ஆகக்கூடியபட்சம் ஒரு திரளாகத் திரட்டுவார்.

இரண்டாவது காரணம், தமிழ்ப் பொது வேட்பாளர் தோல்வியுற்றால் அது தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளின் தோல்வியாகக் காட்டப்படும் என்பது...

உண்மைதான். ஆனால் தேர்தல் என்று வந்தால் வெற்றி மட்டும் தான் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தரப்பை ஒன்றிணைப்பதற்கான மிக வலிமையான ஒரு செய்முறையாக அது இருக்கும் என்பதே வெற்றிதான். அங்கு தேர்தல் வெற்றியை மட்டும் வைத்து அந்த முயற்சியின் இறுதியான விளைவை மதிப்பிடவேண்டியதில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் இம்முறை பொதுவேட்பாளர் என்ற கோரிக்கை மேற்பரப்புக்கு வந்திருப்பது ஒரு வெற்றி. அதை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு எப்படி மேலே உயர்த்துவது என்று தமிழ்த்தரப்பு சிந்தித்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**தமிழ்ப் பொதுவேட்பாளரால் சிங்களவாதம் தூண்டப்படுமா?**

மூன்றாவது காரணம், ஒரு தமிழ்ப்பொதுவேட்பாளர் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத கருத்துகளைத் தூண்டிவிடுவார் என்பது...

சம்பந்தர் திரும்பத் திரும்ப இந்தக் கருத்தைச் சொல்லுகிறார். தமிழரசுக் கட்சிக்குள் ஒரு பகுதியினரும் அதைக் கூறுகிறார்கள். அவ்வாறு தூண்டப்படும் சிங்கள வாக்காளர்கள் ராஜபக்சக்களுக்கு வாக்களிப்பார்கள் என்றும் எனவே ராஜபக்சக்களை வெற்றிபெற வைப்பதற்குத்தான் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்படுகிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காட்டினால் அல்லது தமிழ்மக்கள் தனித்து முடிவு எடுத்தால், அது சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிடும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இங்குள்ள அடிப்படைக் கேள்வி என்னவென்றால், சிங்கள - பௌத்த பெருந்தேசிய வாதம் இப்பொழுது மட்டும் என்ன தூங்கிக்கொண்டா இருக்கிறது? அப்படி என்றால் விகாரைகளைக் கட்டுவதும் தமிழ் மரபுரிமைச் சின்னங்களை ஆக்கிரமிப்பதும் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிப்பதும் யார்? சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதம் கோபித்துக் கொள்ளும் அல்லது அது தன்னை மீண்டும் பலப்படுத்திக் கொள்ளும் என்ற பயப்பட்டால் தமிழ் மக்கள் எதிர்ப்பு அரசியலையே கையில் எடுக்கக்கூடாது. தமிழ்த் தேசியம் என்ற வார்த்தையெல்லாம் பயன்படுத்தக்கூடாது. போராட்டம், சுதந்திரம் என்றெல்லாம்

06

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
21 ஏப்ரல் 2024

பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும்

10



### டட்லிக்கு முட்டுக்கொடுத்தது ஏன்?

மறுபுறம் சிறிமாவோ பண்டார நாயக்காவின் சோசலிச நாடுகளுடனான நட்புறவை வளர்க்கவேண்டும் என்ற வெளியுறவுக் கொள்கை, இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவையும் அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. இதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்து வலுவான கூட்டணியொன்று உருவாக்கம் பெற்றது . இந்தக் கூட்டணியின் வளர்ச்சி, ஐக்கிய தேசியக் கட்சி மீதான சிங்கள மக்களின் ஆதரவு நிலைப்பாட்டைச் சீர்குலைத்தது. இவ்வாறான சூழ்நிலையில் தமிழரசுக் கட்சி, ஐக்கியக் தேசியக் கட்சி தலைமையிலான தேசிய அரசாங்கம் கவிழுமாயின், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான சூழ்நிலை காணப்பட்டது.



இந்த வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் நாம் ஒரு புரிதலைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அன்றைய அரசியல் சூழ்நிலையில், டட்லி தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதன்மூலம் தமிழருக்கு எதுவிதமான நன்மையும் கிடைத்திருக்காது. மாறாக சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கைகளுக்கு ஆட்சியதிகாரம் சென்றிருந்தால், மீண்டும் திட்டமிட்ட தமிழ் இன அடையாள அழிப்பே தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கும். அதைவிட முக்கியமான விடயம், சோல்பரி யாப்புக்கு பதிலாக புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் பண்டாரநாயக்காவின் கனவும் இலகுவில் நிறைவேறி இருக்கும்.


ஏற்கனவே, பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட சோல்பரி யாப்பில் வகுக்கப்பட்ட சிறுபான்மையினர் காப்பீட்டுக்கு மதிப்பளிக்காத இந்த சிங்களத் தலைவர்கள் புதிய அரசியல் யாப்பில் எவ்வாறு சிறுபான்மை இனமக்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிப்பார்கள்/ பாதுகாப்பார்கள்?

எனவே இவ்வாறான நெருக்கடி நிலைகளைச் சமாளிக்கவும், புதிய அரசியல் யாப்பு உருவாக்க சிந்தனையை மடைமாற்றவுமே தமிழரசுக் கட்சி, டட்லி சேனநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு அதன் ஆயுட்காலம் முடிவடையும் வரை ஆதரவு வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. டட்லி - செல்வா உடன்படிக்கை சார்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியமை சார்ந்தும் தமிழரசுக் கட்சி மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், ஒரு தலைவராக `அன்றைய அரசியல் சூழ்நிலையில் தந்தை செல்வநாயகம் எடுத்த முடிவு காலத்தின் கட்டாயம் என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

### வரலாறும் அதன் பயணப்பாடும்

ஆரம்ப காலத்தில், இலங்கைத்தீவில் 'இலங்கைத் தேசியவாத உணர்வை' வளர்க்கவேண்டும் என்ற சிந்தனை சில சிங்கள இடதுசாரித் சிந்தனையாளர்களிடம் காணப்பட்டது. எனினும் காலவோட்டத்தில் தீவிர சிங்கள - பௌத்த தேசியவாத கருத்தியல்களின் பாதிப்பின் விளைவாக பல இடதுசாரிச் சிந்தனையாளர்களும் சிங்கள - பௌத்த தேசியவாதிகளுடன் கைகோர்த்து சிறுபான்மை இன அடையாள அழிப்பை முன்னகர்த்த துணைபுரிந்தனர்.

### இடதுசாரிகள் என்போர் யார்?



இடதுசாரிகள் அல்லது மார்க்சியச் சிந்தனையாளர்கள் என அழைக்கப்படுபவர்கள் கார்ல் மார்க்ஸின் கருத்தியல்களை பின்பற்றுவோர். கார்ல் மார்க்ஸின் சமுதாய வரலாற்று வளர்ச்சி கருத்தியலின் அடிப்படையில் தற்காலத்தில் இரண்டு வர்க்கங்கள் உண்டு எனக் கூறியுள்ளார். ஒன்று, முதலாளி வர்க்கம். மற்றையது, தொழிலாளி வர்க்கம். இதில் முதலாளி வர்க்கத்தினர் தொழிலாளர் வர்க்கத்தை அடக்கி ஆள்வதற்காக அரசை தோற்றுவித்துள்ளனர் என மார்க்ஸ் கூறுகின்றார். இங்கு அரசு என்பது வர்க்க நலன் பேணும் கருவியாக மட்டுமே செயற்படுகிறது என்கிறார். எனவே, வர்க்க நலன் பேணும் அரசை இல்லாது ஒழிக்க வேண்டுமென்றால், முதலில் தொழிலாளி வர்க்கம், முதாலாளித்துவ நலனைப் பாதுகாக்கின்ற அரசுக்கு எதிராக புரட்சி செய்து, அந்த அரசினைக் கைப்பற்ற வேண்டும். இதன் விளைவாக தொழிலாளர் வர்க்கத்தினால் புதிய அரசு உருவாக்கப்படும். அவ்வாறு உருவாகும் அரசு 'தொழிலாளர் வர்க்க சர்வாதிகார அரசாக' காணப்படும். இந்த அரசின் மூலமே சோசலிச சமுதாயம் தோற்றம் பெறும். இந்தச் சமுதாயத்தில் முதலாளி வர்க்கம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டு தொழிலாளர் வர்க்கம் மட்டுமே எஞ்சியிருக்கும்.

இறுதியாக சோசலிச சமுதாய சர்வாதிகார அரசின் அதி உச்ச வெளிப்பாடாக நவீன கம்யூனிஸ சமுதாயம் தோற்றுவிக்கப்படும் என மார்க்ஸ் நம்பினார். அந்த நவீன கம்யூனிச சமுதாயத்தில் வர்க்கங்கள் (முதலாளி, தொழிலாளி) இல்லாது போய்விடும் எனவும் நம்பிக்கை கொண்டிருந்தார். மார்க்ஸ்சின் கோட்பாட்டில் இருந்து நாம் ஒரு புரிதலைப் பெற்றுக் கொள்ளலாம் தொழிலாளர் வர்க்க உணர்வின் வெளிப்பாட்டில் இருந்தே மார்க்சிஸ சிந்தனை தோற்றம் பெறுகின்றது. இங்கு தொழிலாளர் வர்க்கம் இன, மத, மொழி போன்ற பற்றுணர்வை துறந்து 'நாம் தொழிலாளர்' என்ற உணர்வின் அடிப்படையில் ஒன்றிணையவேண்டும் என மார்க்ஸ் எதிர்பார்த்தார். அதன் அடிப்படையிலேயே மார்க்சிசக் கோட்பாட்டில் உலக மக்களை இரண்டு வர்க்கங்களாகப் பிரித்து அடையாளப்படுத்துகின்றனர். மார்க்சிச கோட்பாட்டில் இன, மத, மொழி, நிற, பிரதேச வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட தேசியவாத உணர்வுகளை அவர் கருத்தில் கொண்டதாக தெரியவில்லை. எனவே இதிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரலாம். சிங்களத் தேசியவாதம், தமிழ்த்தேசியவாத என்ற உணர்வுகள் எவ்வாறு தத்தம் இன இருப்பைப் பாதுகாப்பதற்காகத் தமிழ்மக்கள் மற்றும் சிங்களமக்கள் மத்தியில் தோற்றம் பெற்றனவோ, அதே போல தொழிலாளர் வர்க்க நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் முதலாளி வர்க்கத்திடம் அடிமைப்பட்டிருந்த தொழிலாளர்களை மீட்பதற்காவும் தொழிலாளர் மத்தியில் தொழிலாளர் வர்க்க உணர்வு தோற்றம் பெற்றது.

அந்தத் தொழிலாளர் வர்க்க உணர்வினை கார்ல் மார்க்ஸ் தனது மார்க்சிசக் கோட்பாட்டின் மூலம் அடையாளப்படுத்தினார். தொழிலாளர் வர்க்கத்தினால் மட்டுமே இந்த வர்க்க வேறுபாட்டைக் களையமுடியும் என வாதிட்டார். இவ்வாறான மார்க்ஸின் கருத்தியல்கள் தொழிலாளர் வர்க்க உணர்வை வலுப்படுத்தியது. இதன் விளைவாக தொழிலாளர் வர்க்க உணர்வை வெளிப்படுத்துபவர்களை மார்க்ஸியவாதிகள், இடதுசாரிகள் என இந்த உலகம் அழைக்க ஆரம்பித்தது.

### இலங்கையில் மார்க்ஸியம்

இலங்கையில் தொழிலாளர் வர்க்கம் இயக்கம் என்பது 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறை முதலாளித்துவ எழுச்சியுடன் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அன்றைய காலகட்டத்தில் தொழிலாளர் வர்க்கத்தில் சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், மலையாளிகள், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் போன்ற பல்வேறு இனத்தவரும் காணப்பட்டனர்.

ஆரம்பத்தில் இலங்கைத் தொழிலாளர்கள் மத்தியில் சாதி, மத .இன, பேதங்களை மறந்து பொருளாதாரக் கோரிக்கைகள் ஜனநாயக முறைப்படி போராட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. குறிப்பாக 1893ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி எச்.டபிள்யூ. கேவ் கொம்பனியைச் சேர்ந்த 60 அச்சுத் தொழிலாளர்கள் தமது சம்பளம் தாமதமானதற்காக 5 நாள்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு கிட்டத்தட்ட 500 இற்கு மேற்பட்ட அச்சுத் தொழிலாளர்கள் ஆதரவு தெரிவித்தனர். இதன் விளைவாக இலங்கையின் முதலாவது தொழிற்சங்கமான இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது. இந்தத் தொழிற்சங்கத்தின் முதற் சுலோகமாக 'ஒற்றுமையே பலம்' என்ற சுலோகம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி



விசும்பின் துளி வீழின் அல்லால்...

## பூவுலகின் நீர்ப்பரம்பல்

**2.5%**
மொத்த நிலப்பரப்பில் நன்னீர்

நன்னீரில்

**30.1%** நிலத்தடி நீர்

**0.4%** மேற்பரப்பு, வளிமண்டல நீர்

மேற்பரப்பு நீரில்

**1.5%** ஆறுகள்

**8.5%** ஈர நிலங்கள்

**67.5%** ஏரிகள்

தரவு மூலம்: உலக வங்கி

## புலமையாளர் பதில்



**கேள்வி:** சேறும் புழுதியும் வீட்டுக்குள்ளோ கட்டடத்துக்குள்ளோ வரக்கூடாது என்று இப்போது எல்லோரும் சிமெந்துக் கற்களைப் பதித்தும் சிமெந்தைப் பூசியும் மூடிவிடுகிறார்கள். அவ்வாறு செய்வதால் எங்கள் நீர் வளத்துக்கும் நிலத்துக்கும் பாதிப்பு ஏதும் இருக்கிறதா?

*(அச்சுதன் தியாகராஜா, சுண்டிக்குளி)*

**பதில்:** நிச்சயமாக. பெய்யும் மழை இயல்பாக மண்ணுக்குள் செறிவதும், அந் நீர் மெதுவாக நிலத்தினூடாக செல்லும் பாதையில் வடிகட்டப்பட்ட முறையில் கீழே சென்று தேங்குவதும் தான் எமது இருப்புக்கான நிலத்தடி நீர்வளமாகிறது. மழைநீர் இவ்வாறு மண்ணுள் பயணித்து நன்னீராகத் திரும்பக் கிடைக்கும் இவ்வியல்பான நீர் சுழற்சி வட்டம் முறையாக இயங்கவேண்டுமெனின் மண்ணை மூடும் செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். வீட்டிலும் வீதிகளிலும் மழைநீர் மண்ணுக்குள் செல்வது தடுக்கப்படும் போது ஓடி வெளியேற முயலும் நீர் திடீர் வெள்ளப் பெருக்குகளை ஏற்படுத்துவதையும் கண்டுவருகிறோம் அல்லவா? நகர மயமாதலின் காரணமாக பல்வேறு உட்கட்டுமானங்கள் தோன்றுவதால் பொதுவாக நிலப்பரப்பும் ஏன் கிராமப்புற வயல், தோட்ட வெளிகளும் மூடப்படுவதை soil sealing என்கிறோம். உலகம் முழுதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ் வளர்ச்சியின் பாதிப்பினை எம்போன்ற நீர் நெருக்கடியின் மத்தியில் வாழும் சமூகங்கள் மிகக் கவனமாக நோக்க வேண்டும்.

வீட்டைச் சுற்றியுள்ள நிலத்தையாவது மூடிக்கட்டாமல் விடுவோமாயின் நன்னீர் வளம் நிலைக்கும். அது எமக்கும் நல்லது. ஊருக்கும் நல்லது.

*(கலாநிதி. பாலசந்திரன் கேதீசன்,
பொறியியல் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*



## இளையோர் பார்வை



## மாமனிதராய் எழுவோம்!

நீர் இன்றி அமையாது உலகு என்பர்
நீரின் அருமை புரியாதோர் இன்றும் உளர்

அத்தியாவசிய தேவை நீராகும் அதை
அநாவசியமாய்க் கையாள்வோர் பலராகும்.

தாகத்தால் தவிக்கும் போது நீரின் பெருமை அறிவாய்
நீரை வீணாக்காது சேமித்து எதிர்காலம் உரைப்பாய்

சிறுதுளியின் மகத்துவம் உணர்வோம் எம்
சீர்நிலம் காக்க மாமனிதராய் எழுவோம்....

**சிவாஜினி தயாகுலன்,** உரும்பிராய்

## டுபாயை கலக்கிய பெருமழை



அக்கம் பக்கம்

டுபாயில் வழக்கத்திற்கு மாறாகப் பெய்த பெருமழை நகரின் அன்றாட வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறது. வலுவான புயல் காற்று அமைப்பு டுபாய் பகுதியைக் கடந்து சென்றதே இதற்குக் காரணம் என நிபுணர்கள் கூறுகின்றனர். உயரும் வெப்பநிலைகள் இதில் பங்கு வகித்திருக்கலாம் எனவும், டுபாயில் ஒன்றரை வருட காலத்தில் பெய்ய



வேண்டிய மழை ஒரே நாளில் பெய்திருக்கின்றமையானது காலநிலை மாற்றத்தின் தீவிர பாதிப்புகளை மேலும் வெளிப்படுத்தியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. டுபாயின் பெருமழை வீழ்ச்சிக்கும் முகில் விதைப்பு (cloud seeding) எனப்படும் மழைமுகில்களைக் கூட்டி வலிந்து மழையாக்கும் செயன்முறைக்கும் தொடர்பெதுவும் இல்லையென வானிலை நிபுணர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆயினும் இத்தகைய தீவிர வானிலை நிகழ்வுகள் எதிர்காலத்தில் இன்னும் அடிக்கடி நிகழலாம் என மீளவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## தெரியுமா?



கடந்த மாத அமர்வு

## முழம் சறுக்கிய பெங்களூர்!

கடந்த மாதம் (மார்ச்) 28 ஆம் திகதியன்று நிகழ்நிலை அமர்வில் நடைபெற்ற வட மாகாண நீர் வாண்மையாளர்களின் உரையாடல் வட்டத்தில் பெங்களூர் நகரின் இன்றைய நீர் நெருக்கடி பற்றிப் பேசப்பட்டது.

WELL (Water Environment Land Livelihoods) Labs என்ற பெங்களூர் நிறுவனத்தின் தலைவரான கலாநிதி வீணா ஸ்ரீநிவாசன் பிரதம உரையாளராகக் கலந்துகொண்டு பெங்களூர் நகர் எதிர்கொள்ளும் நீர் நெருக்கடியின் யதார்த்தத்தைப் பற்றி உரையாடினார்.

பெங்களூர் நகரின் மையப்பகுதியில் குழாய்வழி நீர் இணைப்புகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. மாறாக புற நகர்ப்பகுதிகளில் குறைந்தளவிலான குழாய் வழி இணைப்புகளே காணப்படுகின்றன. இத்தகைய இடங்களில் உருவாகிய இந்த நீர் நெருக்கடி, அபரிமித சனத்தொகைச் செறிவு, அதிகரித்த நீரின் தேவை, மிகையான நிலத்தடி நீர் அகழ்வு, அதனால் உருவாகிய சமூக ஏற்றத்தாழ்வுகள், ஒழுங்கு விதிகளின் ஒழுங்குறுத்துகைகள், சுத்திகரிக்கப்படும் நீரின் மீள்பாவனை தொடர்பான மக்களின் மனப்பாங்கு, நீர் நெருக்கடியுடன் அம்மனப்பாங்கு மாற்றமடையும் போக்கு, அனைத்துத் தரப்பினரும் கூடி ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தையும் நீர் வளக்கண்காணிப்பிலே பொதுமக்களின் பங்களிப்பை முன்னெடுத்துச் செல்லவேண்டிய தேவை என அந்த உரையாடல் விரிந்து சென்றது.

தானே இந்தியாவின் சிலிக்கன் பள்ளத்தாக்கு என்ற கனவை நனவாக்கி நிலைநிறுத்த முயற்சித்த தன் பயணத்தில் சாணேறிய பெங்களூரை இந்த நீர் நெருக்கடி முழம் சறுக்க வைத்திருக்கிறது. இலங்கையின் சிலிக்கன் பள்ளத்தாக்காக மாறும் கனவோடு நகரும் யாழ். மண்ணுக்கும் இதே அச்சுறுத்தல் காத்திருக்கிறது என்பதில் ஐயம் ஏதும் இல்லை. **ஆதலால் முதலீட்டாளர்கள் எவர் முன் வரினும் யாழ். மண்ணின் நீர் வளத்தை மனதில் இருத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதே சாலப்பொருந்தும்.**

## அறைகூவல்

**தலைப்பு:** எல்நினோவின் பின்னணியில் சட்டென மாறும் வானிலை

**திகதி : 23 மே 2024**

**நேரம் : பி.ப 7.30**

**அடையாளம்:**
**675 137 3490**

**கடவுச்சொல்:**
**abc.1234**

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றி உங்கள் கருத்துகளைப் பகிர்வதற்கான இணைப்பை அணுகுவதற்கு தொலைபேசியால் மின்வருடவும்

*வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி: WAter Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna; மின்னஞ்சல்: water@univ.jfn.ac.lk.*

துளியின் அடுத்த பகுதி மே 19 சஞ்சீவியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர். பிரகாஷ்



# மரியுபோலில் இனி ரஷ்யக் கொடிகள்!

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையின் 55 ஆவது நாளில் மரியுபோல் நகரத்தைக் கைப்பற்றிய ரஷ்யா அந்த நகரில் தற்போது தனது முழுமையான ஆதிக்கத்தை நிலைப்படுத்தி வருகின்றது. புதிய குடியிருப்புக்கள், கட்டடங்கள் என்பன ரஷ்யாவால் அங்கு முழு வீச்சில் அமைக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பான ஒளிப்படங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன மேற்கு ஊடகங்கள். மரியுபோலின் அமைவிடம், அந்த நகரின் வளம் என்பனவற்றால், கிரிமியக் குடாவுக்கு நேர்ந்த கதியைப்போன்றுதான் மரியுபோலுக்கும் நிகழும், அந்த நகரம் ரஷ்யாவால் நிரந்தரக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டு ரஷ்யப் பகுதியாக ஆக்கிரமிக்கப்பட்டுவிடும் என்று அரசியல் அவதானிகள் கணித்திருந்த நிலையில், இந்தக் கணிப்பை மெய்ப்படுத்தும் வகையில்தான் வினையாற்றியிருக்கின்றார் விளாடிமிர் புடின்.

**கிரிமியாவுக்கு என்ன நடந்தது?**

2014 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு உக்ரைன் முயற்சிகளை மேற்கொண்டதை அடுத்து ரஷ்யா உக்ரைனுக்கு எதிராகப் போர் தொடுத்தது. இதன்போது உக்ரைனின் ஆளுகைக்குக் கீழிருந்த கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றியது. கிரிமியா எண்ணெய் வளம் மிகமிக அதிகம் உள்ள ஒரு பகுதி. அத்துடன் கருங்கடல் வழியான வர்த்தகத்துக்கு கிரிமியக் குடா அதி முக்கியத்துவம் மிக்க கேந்திரப் பகுதி.

2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான முறுகல்நிலை ஓரளவு தணிந்த போதிலும் கிரிமியக் குடாவை ரஷ்யா மீண்டும் கையளிக்கவில்லை. அது ஆக்கிரமிக்கப்பட்ட ரஷ்யப் பகுதியாகத்தான் இன்றளவும் இருக்கின்றது. கிரிமியாவை தனது நிலப்பரப்பாக சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்று ரஷ்யா தொடர்ந்து அழுத்தம் கொடுத்தும் வருகின்றது.

கிரிமியக் குடாவைப் போன்றுதான் மரியுபோல் இயற்கை வளம் நிறைந்த பகுதி. ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான எல்லைக்கு அருகே மரியுபோல் இருக்கின்றது. எண்ணெய் வளம், எரிவாயு வளம், தாது வளங்களைத் தாராளமாகக் கொண்ட மரியுபோல், உக்ரைனின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் முதன்மைச் சக்தியாக விளங்குகின்றது. உக்ரைனின் தலைநகர் கீவ் என்றால் வர்த்தக நகர் மரியுபோல். ஐரோப்பாவின் மிகப்பெரும் இரும்புத் தொழிற்சாலைகளில் ஒன்று மரியுபோலில்தான் இருக்கின்றது. அந்தத் தொழிற்சாலைக்கு எந்த ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாது என்ற புடினின் சிறப்பு உத்தரவின் பின்னர்தான் மரியுபோல் ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டது. அதாவது, மரியுபோலை மீண்டும் உக்ரைனிடம் கையளிக்காமல் அதை ஆக்கிரமிப்பதற்குரிய அனைத்து சமிக்ஞைகளையும் ரஷ்யா வெளிப்படுத்தியிருந்தது. அதன் தொடர்ச்சியாகத்தான் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் கட்டுமானங்கள் கவனம் பெற்றிருக்கின்றன. ஆக, கிரிமியக் குடாவைப்போன்று மரியுபோலும் இனி ஆக்கிரமிக்கப்பட்ட ரஷ்யப் பகுதியாக இருக்கப்போகின்றது.

**கீவ் ஏன் தாக்கப்பட்டது?**

சரி, மரியுபோலைக் கைப்பற்றுவதுதான் ரஷ்யப் படைகளின் நோக்கம் என்றால் அதை எப்போதே செய்திருக்கலாமே? எதற்காக தலைநகர் கீவ் வரை முன்னேற வேண்டும்? என்ற கேள்வி பலருக்கும் எழலாம். இங்கேதான் புடினின் மேற்கத்தேயத்துக்கு எதிரான ராஜதந்திரம் தனித்து நிற்கின்றது. உக்ரைனில் திட்டமிட்ட 'பொருளாதாரச் சிதைப்பை' புடின் கனகச்சிதமாக மேற்கொண்டிருக்கின்றார்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிராகத்தான் இந்தப் போர் தொடுக்கப்பட்டது. அதேநேரம் ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைவதில் ரஷ்யாவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நேட்டோதான் இராணுவக் கூட்டணிகளுடன் தொடர்புடைய நாடு. அதில் உக்ரைன் இணைந்தால்தான் அது ரஷ்யாவின் இருப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைந்தால் அது உக்ரைனின் பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். இந்தப் பொருளாதாரச் சிதைப்புக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைவதால் எந்தத் தீமையும் (பொருளாதாரம் சார்பில்) ரஷ்யாவுக்கு ஏற்படப்போவதில்லை.

இன்னும் சொல்லப்போனால், உக்ரைனில் ரஷ்யா ஏற்படுத்திய பில்லியன் டொலர் கணக்கான அழிவுகளுக்காக ஐரோப்பியஒன்றியம் பணத்தை வாரி இறைக்க வேண்டி வரும்.

இப்போது உக்ரைனை ஒன்றியத்தில் இணைக்க வேண்டுமா இல்லையா என்பதை ஐரோப்பிய ஒன்றியம்தான் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு இணைத்தால் யூரோ பெறுமதி இழக்கும். அதைத்தான் ரஷ்யாவும் விரும்புகின்றது. ஆக இப்போது புடினுக்கு 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்'.




# கலை, இலக்கிய அம்சங்களுடன் கலைமுகம் வெளிவந்தது

யாழ்ப்பாணம், திருமறைக் கலாமன்றத்தின் வெளியீட்டில் கலைமுகம் காலாண்டுச் சஞ்சிகையின் நடப்பாண்டின் முதலாம் காலாண்டுக்கான சஞ்சிகை வெளிவந்திருக்கின்றது.

'கலைமுகத்தின்' 76ஆவது முகமாகவும் இதழாகவும் இம்முறை வெளியீடு அமைந்திருக்கின்றது. கட்டுரைகள், நேர்காணல்கள், கவிதைகள், நூல் மதிப்பீடுகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், பத்தியெழுத்துகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், அஞ்சலிக் குறிப்புகள் மற்றும் பதிவுகள் என பல்தரப்பட்ட படைப்புகளையும் உள்ளீர்த்து வாசகர்களுக்கு முழுமையான வாசிப்பனுபவத்தை வழங்கும் வகையில், வழக்கம்போல இந்த இதழும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

20ஆம் நூற்றாண்டில், யூத இனத்தின் செல்வாக்கு மிக்க அரசியல் தத்துவவாதிகளில் ஒருவரும், பலஸ்தீனத்துக்கும் யூதத்துக்குமான பிரச்சினையை யதார்த்த பூர்வமாக அணுகியவருமான ஹன்னா ஆரண்ட் பற்றிய குறிப்பு இதழின் முதலாவது வாசிப்பனுபவமாக வருகின்றது. ஹன்னாவின் அரசியல் தத்துவச் சிந்தனைகளின் அடிப்படைகளையும், அதன் கட்டமைப்புகளையும் புரிந்துகொள்வதாயின் அவரில் தாக்கம் செலுத்தியவர்களின் வழியில் (ஆட்சியாளர்கள், எழுத்தாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள்) பயணிப்பதன் மூலமே அதனைச் சாத்தியமாக்கிக் கொள்ளலாம். அந்த வகையில், முற்றுமுழுதான புரிதலையும் எண்பித்தலையும் வாசகர்களுக்கு இந்தக் குறிப்பு விருந்தாக்குகின்றது.

'மழைக்குள் ஒரு பூனை' என்ற ஆங்கிலமொழி சிறுகதையின் மொழியாக்கமும் இதழில் பேசப்படும் விடயமாகக் காணப்படுவதுடன், ஆங்கிலச் சிறுகதைகளின் வாசிப்பனுபவத்தையும் எழுத்தோட்டத்தையும் அது கனகச்சிதமாக வெளிப்படுத்துகின்றது.

கலைமுகம் இதழின் 75ஆவது பதிப்பு அண்மையில்தான் 'சிறப்பிதழாக' பெருமெடுப்பில் வெளியிடப்பட்டது. அந்தக் களைப்பும், உழைப்பின் வீச்சும் அடங்குவதற்கும் அடுத்த இதழை கலைமுகம் குழுவினர் வெளியிட்டுள்ளமை பாராட்டப்படவேண்டியதே. இவ்வாறான படைப்புகளை மெச்சுவதும் ஊக்கப்படுத்துவதும் விற்பனைகளை ஊக்குவிப்பதும்தான் உள்ளூர் கலைஞர்களுக்கு நாம் செய்யும் பேருதவியுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா..!

மயூ

இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் ஆரம்பமாகி விட்டது. தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டதிலிருந்தே எதிர்பார்ப்பும், சர்ச்சைகளுமாக அரசியல் களம் சூடாகிக் கொண்டே இருந்தது. வேட்பாளர்களின் அதிரடிப் பரப்புரைகள், தலைவர்களின் சூறாவளிச் சுற்றுப்பயணங்கள், அள்ளி வழங்கப்படும் வாக்குறுதிகள், எதிர்த்தரப்புகளின் மீதான விமர்சனங்கள் எனத் தொகுதிகளெங்கும் கடந்த ஒரு மாதமாக அனல் பறந்து முடிந்திருக்கின்றது தேர்தல் களம்.

இந்தியாவில் மட்டுமன்றில் பல நாடுகளிலும் இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக அமைந்திருக்கின்றது. இலங்கையும் தேர்தல்களை இந்த ஆண்டில் எதிர்கொள்ளவிருக்கின்றது. கடந்த ஜனவரி மாதம் பூட்டான், வங்கதேசம், தாய்வான் மக்களும், பெப்ரவரி மாதம் பாகிஸ்தான், பின்லாந்து, இந்தோனேசியா, கம்போடியா மக்களும், மார்ச் மாதம் ரஷ்யா, ஈரான், போர்த்துக்கல் மக்களும் தேர்தல்களைச் சந்தித்திருந்தனர். தென்னாபிரிக்கா, மெக்சிக்கோ, ஆஸ்திரியா, ருவாண்டா, மங்கோலியா, லிதுவேனியா, ஐஸ்லாந்து, உருகுவே, ஜோர்டான், வெனிசுலா ஆகிய நாடுகள் இந்த ஆண்டில் தேர்தல்களைச் சந்திக்கவுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலும் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடக்கவிருக்கின்றது. பல நாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஆண்டாக இந்த ஆண்டு அமையவிருக்கின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, தொடக்கத்தில் இருமுனைப் போட்டியாக இருந்த தேர்தல் களம், பா.ஜ.க., நாம் தமிழர் கட்சிகளின் பிரசாரத்தைத் தொடர்ந்து, நான்குமுனைப் போட்டியாக மாறியிருந்தது. வழமையைப் போன்றல்லாது, பரப்புரைக்கு வேட்பாளர்களை நிறுத்தி வாக்குறுதிகள், கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் கேள்வி கேட்டதும், வேட்பாளர்கள் திணறியதும் இம்முறை நடந்திருக்கின்றது.

தமிழகத்தின் 39 தொகுதிகள், புதுச்சேரி உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் முதல்கட்ட வாக்குப்பதிவு கடந்த 19 ஆம் திகதி நடந்திருந்தது. ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி, மே மாதம் 7ஆம், 13ஆம், 20ஆம், 25 ஆம் திகதிகள், ஜூன் மாதம் முதலாம் திகதி என மொத்தம் 7 கட்டங்களாக இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. இந்தியாவை அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஆட்சி செய்யப் போவது யார் என்பது அன்று தெரியவரும்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், பாரதிய ஜனதாக் கட்சி என்பன கூட்டணி வைத்து போட்டியிடுகின்றன. நாம் தமிழர் கட்சி வழக்கம்போல் இந்த முறையும் தனித்துக் களமிறங்கியிருக்கின்றது. இவை தவிர ஏராளமான சுயேச்சைகளும் போட்டியிடுகின்றன . தற்போதைய கருத்துக் கணிப்புகளின்படி, தமிழகத்தில் ஆட்சியில் உள்ள தி.மு.க. 34 தொகுதிகளில் வெல்லும் என்றும், பா.ஜ.க. ஒரு தொகுதியில் வெல்லும் என்றும் எதிர்வு கூறப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் நாம் தமிழர் கட்சியும் முன்னெப்போதும் இல்லாத வகையில் எழுச்சி கண்டிருக்கின்றது. அதனால் இந்தக் கருத்துக் கணிப்பு முடிவுகளில் மாற்றங்கள் இருக்கும் என்கின்றனர் தமிழக அரசியல் ஆய்வாளர்கள். இந்தக் கணிப்புகளைத் தாண்டி மக்களின் முடிவே இறுதி முடிவாக அமையும்.

கடந்த தேர்தல்களை விடவும் இந்தத் தேர்தல் ஈழத் தமிழ் மக்களின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றது. இலங்கையின் கச்சதீவு விவகாரம் தமிழகக் கட்சிகளின் தேர்தல் பரப்புரையில் முக்கியமான இடம்பிடித்தமையே இதற்குக் காரணம். தமிழகத்தின் முதன்மைக் கட்சிகள் கச்சதீவை இலங்கையிடமிருந்து இந்தியா மீளப் பெற வேண்டும் என்று பரப்புரைகளில் முதன்மைப்படுத்தியிருந்தமை ஈழத் தமிழர்கள் மத்தியில் அசூசையை ஏற்படுத்தியிருந்தது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வெறுப்படைந்திருக்கும் ஈழத் தமிழர்களுக்கு, தமிழக அரசியல் கட்சிகளின் இந்த அரசியல் சித்து விளையாட்டு மேலும் வெறுப்பை ஏற்படுத்தியிருந்ததில் ஆச்சரியமில்லை. அதனால் ஜூன் 4 ஆம் திகதி எந்தக் கட்சி இந்தியாவின் ஆட்சிக்கட்டிலில் ஏறப்போகின்றது என்பதை ஈழத்தமிழர்களும் முன்னெப்போதுமில்லாத அக்கறையோடு நோக்குகின்றனர். ஆனால் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் கச்சதீவை இந்தியா ஒருபோதும் மீளக்கோரப்போவதில்லை. அப்படி ஒரு விவகாரம் இருப்பதையே இந்திய ஆட்சியாளர்கள் மறந்தும் விடுவார்கள். மீண்டும் அடுத்த தேர்தலில் தான் கச்சதீவு விவகாரம் விஸ்வரூபமெடுக்கும்.



கே.வி.தவராசா

# லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு!



இந்த வழக்கின் ஆரம்பத்தில் முதலாவது, இரண்டாவது எதிரிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த வேலுப்பிள்ளை பிரபாகரனும், பொட்டு அம்மானும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டனர் என்று அரசும் அரச ஊடகங்களும் சமூகவலைத்தளங்களும் செய்திகளை வெளியிட்டபோதிலும் அவை சட்டரீதியாக இன்றுவரை உறுதிப்படுத்தப்படாதவை என்பதை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.
அவர்களுக்கான மரணவிசாரணை நடைபெற்று மரணச் சான்றிதழ் வழங்கப்படாமையினால் மரணத்தை உறுதிப்படுத்த அரச புலனாய்வுத்துறை பணிப்பாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணம் சட்டவலுவற்றதாகும்.
மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யும் சட்டமா அதிபர் , விசாரணை முடிவடைய முன்னர் எந்த வேளையிலும் எதிரிக்கு அல்லது எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்த குற்றச்சாட்டுப் பத்திரத்தை மீளப்பெறமுடியும் என்பதுடன் திருத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரத்தை நீதிமன்றில் தாக்கல் செய்யவும் முடியும் . ஆனால் இந்த வழக்கில் முதலாவது இரண்டாவது எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேலுப்பிள்ளை பிரபாகரனும், பொட்டு அம்மானும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டதை ஒப்புறுதிப்படுத்த அரச தரப்பு மரண சான்றிதழைத் தாக்கல் செய்யாமல் அரச புலனாய்வுத்துறை பணிப்பாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணத்தைத் தாக்கல் செய்வது சட்டரீதியற்ற செயற்பாடாகும்
இந்தச் சட்டரீதியற்ற செயற்பாட்டை நீதிமன்றம் அங்கீகரிக்குமாயின் இந்தச் செற்பாடு ஒரு தவறான முன்னுதாரணமாக மாறிவிடும்" இவ்வாறு எனது வாதத்தை முன்வைத்த பொழுது , அதற்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்த பிரதி மன்றாடியார் நாயகம் கபில வைத்தியரட்ன என்னைப் பார்த்து " நீர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் பொட்டம்மானுக்குமா முன்னிலையாகியுள்ளீர்? "என்ற கேள்வியை முன்வைத்தார்.
அதற்கு நான் , " நீதிமன்றிடம் இந்த வழக்கின் முதலாவது எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமோ இரண்டாவது எதிராளியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் பொட்டு அம்மானிடமிருந்தோ எந்த விதமான அறிவுறுத்தலும் எனக்குக் கிடைக்கவில்லை.
நான் 6 ஆவது எதிரியான இசிதோர் ஆரோக்கியநாதனுக்கு மட்டுமே இந்த வழக்கில் ஆஜராகின்ற போதிலும் நீதியிலுள்ள அக்கறை காரணமாகவும் , சட்டத்தில் கூறப்பட்டுள்ள நீதிமன்றத்தால் கடைப்பிடிக்கப்படவேண்டிய விடயத்தையே ஒரு சட்டத்தரணி என்ற முறையில்அதனை மன்றில் எடுத்துரைக்க வேண்டிய கடப்பாடு உள்ளதனாலேயே எனது ஆட்சேபனையை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தேன்' என எனது சமர்ப்பணத்தை முடித்தேன்.




ஆனால் மேல்நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க எனது ஆட்சேபனையை நிராகரித்தார். பிரதி மன்றாடியார் நாயகம் கபில வைத்தியரட்னாவினால் சமர்ப்பிக்கப்பட்ட , மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவினால் வழங்கப்பட்ட சட்டவலுவற்ற ஆவணத்தை மரணச் சான்றிதழுக்குப் பதிலாக நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.
இந்த வழக்கில் முத்தையா சகாதேவன், இசிதோர் ஆரோக்கியநாதன் ஆகிய இருவருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

(வழக்குத் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளர்; இனவாதமா?

தி.ராஜ்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு முதன்முறையாக இந்த வருடம் போட்டி ஏற்பட்டது. தலைமைப் பதவிக்கு இருவர் குறிவைத்தமையால் மிக நீண்ட பாரம்பரியம் கொண்ட அந்தக் கட்சியில் தேர்தல் நடந்தது. தலைமைக்கான தேர்தல் தொடர்பில் பல தரப்புகளும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தன. ஆனால் போட்டியிடும் இரு வேட்பாளர்களும் 'இது ஆரோக்கியமானது. ஜனநாயகமானது' என்றெல்லாம் கதைகளைச் சொல்லியிருந்தனர். அந்தக் கதைகளைச் சொன்ன அவர்களுக்கே நிச்சயம் ஓர் உண்மை தெரிந்திருந்தது. தலைவர் தேர்தலின் பின்னர் இரு தரப்பும் இணைந்து செயற்பட முடியாது. ஏனெனில் தேர்தலின்போதான சேறுபூசல்கள் அப்படியிருந்தன. தலைகள் சும்மா இருந்தாலும் வால்கள் அடங்கியிருக்கவில்லை. இதன் விளைவு அந்தக் கட்சியை இப்போது நீதிமன்றப்படியேற்றியிருக்கின்றது. இதைப்பற்றி அலசுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. இந்தத் தலைமைத்துவத் தேர்தல் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஏனைய தமிழ்க் கட்சிகளை பரிகசிப்பதற்காகச் சொன்ன ஒரு விடயம்தான் முக்கியமானது.



'எங்கள் கட்சியில் தலைமைத்துவத்துக்கு போட்டியிடக்கூடிய நிறையப் பேர் இருக்கின்றார்கள்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். ஏனைய தமிழ்க் கட்சிகளிடம் தலைமைத்துவம் மாற்றமில்லாமல் அப்படியே தொடர்வதையும் சுட்டிக்காட்ட அவர் அப்படிச் சொல்லியிருந்தார். அப்படி தலைமைத்துவத்துக்கு பஞ்சமில்லாத தமிழரசுக் கட்சியினர் - குறிப்பாக சுமந்திரன் உள்ளிட்டவர்கள் - ஜனாதிபதித் தேர்தலில் ஏன் தென்னிலங்கை தலைமைகளை நோக்கி ஓடுவதற்கான காரணம் என்ன? தங்களிடமுள்ள தலைமைகளை களமிறக்கி தமிழர்களை ஓரணியாக்கி பலமான செய்தி ஒன்றைச் சொல்லலாமே? அதைவிடுத்து தென்னிலங்கை வேட்பாளர்களின் வேட்டிகளின் பின்னால் ஒளிவதற்கு முயல்வதன் காரணம் என்ன?

புத்தாண்டு அன்று வடமராட்சியில் நடத்திய ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்தொன்றை முன்வைத்தி ருந்தார். "நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் மாற்றத்துக்கான தேர்தலாகும். எனவே இந்தச் சூழலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தெற்கில் இனவாதத்தை கிளர்ந்தெழச் செய்யும்" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் ஊடாக சுமந்திரன் என்ன மாற்றத்தை எதிர்பார்க்கின்றார் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில் தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் தென்னிலங்கையின் சகல தலைமைகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். அவர்களில் வித்தியாசமில்லை. ஒருவர் கொழுக்கட்டை என்றால் மற்றையவர் மோதகம். அவர்களின் உள்ளுடல்களில் மாற்றமில்லை. அதாவது பௌத்த - சிங்கள பேரினவாத நிகழ்சி நிரலை நடைமுறைப்படுத்துவதில் அவர்களிடத்தில் தெளிவான ஒற்றுமை இருக்கின்றது. அப்படியிருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இந்த ஜனாதிபதித் தேர்தல் என்ன மாற்றத்துக்கானது என்பதைச் சொல்லவேண்டும்.

தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்குவதன் ஊடாக தெற்கில் இனவாதத்தைக் கிளர்ந்தெழச் செய்யும் என்று சொல்கின்றார். அவர் தனது மனச்சாட்சியுடன் அல்லது சுயநினைவுடன் பேசுகின்றாரா என்ற சந்தேகம் எழுகின்றது. தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால்தான் தெற்கில் இனவாதம் கிளர்ந்தெழுமா? தமிழ் மக்கள் தென்னிலங்கையில் ஏதாவது ஒரு ஜனாதிபதி வேட்பாளரை ஆதரித்தால், அவரை எதிர்த்துப் போட்டியிடும் மற்றைய ஜனாதிபதி வேட்பாளர் பின்பாக தெற்கின் இனவாத சக்திகள் அணிதிரளத்தான் போகின்றன. போரின் பின்னர் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சேகாவை ஆதரித்தது. அவருடனான எழுத்திலான ஒப்பந்தமும் வெளியானது. அவ்வளவுதான், தெற்கில் அனைத்து இனவாத சக்திகளும் மஹிந்தவின் பின்னால் அணிதிரண்டன. அதை வாய்ப்பாக பயன்படுத்தி மஹிந்தவும் தெற்கில் இனவாதத்தை கக்கினார். சரத்பொன்சேகா தோல்வியைத்தழுவினார். 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னரே இணங்கியிருந்தாலும் தேர்தல் நெருங்கும் தருணத்திலேயே ஆதரவை அறிவித்தது. எழுத்துமூலமான உடன்படிக்கையைச் செய்யவில்லை. இதயத்தால் இணைந்திருக்கின்றோம் என்று சொல்லி இறுதியில் கழுத்தறுத்தது வேறுகதை. அந்தத் தேர்தலில் தெற்கில் மஹிந்தவுக்கு எதிரான இலஞ்ச - ஊழல் வெறுப்பு மேலோங்கியிருந்தமையால் தமிழ் மக்கள் மைத்திரியை ஆதரித்தாலும் மஹிந்த சில லட்ச வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. 2019ஆம் ஆண்டு தேர்தலில் சஜித்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. கோத்தாபய ராஜபக்ச தனிச் சிங்கள வாக்குகளால் அபார வெற்றியைப் பெற்றார். சுமந்திரன் சொல்வதைப்போல தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதால்தான் தெற்கின் இனவாத சக்திகள் கிளர்ந்தெழும் என்பதில்லை. தமிழர்கள் யாரை ஆதரிக்கின்றார்களோ அவர்களுக்கு எதிரான வேட்பாளரின் பின்னால் அவை திரளத்தான் போகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக எப்போதுமே சிங்களவர்கள் கோபப்படுவார்கள், சிங்கள இனவாதிகள் ஒன்று சேர்வார்கள், ராஜபக்சக்கள் மீண்டும் வந்துவிடுவார்கள் என்று சொல்லிச் சொல்லியே தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கைகளை ஒளித்து வைக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் சம்பந்தன்போன்றோர் எதிர்பார்க்கின்றனர். இவர்களால் கடைசி வரையில் தமிழர்களின் உரிமைக்கோரிக்கையை சிங்களவர்களிடம் முன்வைக்கமுடியாது. இப்படியொரு சூழலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தை எதிர்ப்பதற்கு இவர்களிடம் சொல்வதற்கு நியாயமான - தார்மீக ரீதியான எந்தவொரு காரணமும் இல்லை.



# தமிழ்ப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகடனங்களைச் செய்யக்கூடாது. அதேசமயம் தமிழ்ப் பொது வேட்ப்பாளர் ராஜபக்சக்களை வெல்லவைப்பார் என்று பதற்றமடைபவர்களில் ஒரு பகுதியினர் வெளிப்டையாகச் சொல்லாத ஒரு விடயம் என்னவெனில், சஜித்துக்குக் கிடைக்கும் தமிழ் வாக்குகளை பொதுவேட்பாளர் கவர்ந்து விடுவார் என்பது.. நாலாவது காரணம், ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை முன்னிறுத்துகிறவர்கள் யாரோ ஒரு சிங்கள வேட்பாளரோடு டீல் செய்ய விரும்புகிறார்கள் என்ற சந்தேகம்...

இருக்கலாம். அதற்கு வாய்ப்புகள் உண்டு. அதேநேரம் அது தமிழ்ப் பொதுவேட்பாளரின் கோரிக்கைகள் என்ன என்பதில்தான் தங்கி இருக்கின்றது. ஏனென்றால் தமிழ்ப்பொதுவேட்பாளரோடு ஏதோ ஒரு டீலுக்கு வரும் சிங்கள வேட்பாளர் சிங்கள - பௌத்த வாக்குகளை இழக்க வேண்டிவரும் என்பதே இலங்கைத் தீவின் கள யதார்த்தமாகும். சரத் பொன்சேகாவுக்கு அதுதான் நடந்தது. மைத்திரிக்கு அது நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் சம்பந்தர் மையால் உடன்படிக்கை எழுதுவதற்குப் பதிலாக இதயங்களுக்கு இடையில் உடன்படிக்கை செய்யப்படவேண்டும் என்றெல்லாம் இலக்கியத்தனமாகப் பேசினார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் உச்சமான கோரிக்கையை முன்வைத்தால், அவருடன் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் பேரம்பேச வரமாட்டார் என்பதே யதார்த்தம். எனவே தமிழ்ப் பொதுவேட்பாளர் முன்வைக்கப் போகும் கோரிக்கைகள் எவை என்பதுதான் அதைத் தீர்மானிக்கின்றது.

## தேர்தல் புறக்கணிப்பு என்றால் என்ன..?

ஐந்தாவது காரணம், எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்பமுடியாது. எனவே தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது...

உண்மை. எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்பக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளர் முன்வைக்கப்படவேண்டும் என்று கேட்கப்படுகிறது. 15 ஆண்டுகளாக தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்கு வழங்கப்பட்டன. அதை நிறுத்தி அதை தமிழ் வேட்பாளருக்கு உரியதாகத் திரும்பினால் என்ன ? தேர்தல் புறக்கணிப்புக்கான ஒரு தெரிவாகத்தான் இந்தியாவில் நோட்டா என்று தெரிவு உண்டு. அதைப் போல. ஆனால் அந்தத் தெரிவை முன்வைக்கும் ஒரு கட்சி அதற்காக உழைக்கவேண்டும். அந்தத் தெரிவை மக்கள் மயப்படுத்தவேண்டும். அறிக்கையை விட்டுவிட்டுப் பேசாமல் இருக்கமுடியாது. அப்படி இருந்தால் ஏனைய கட்சிகள் மக்களைப் பிழையான வேட்பாளரை நோக்கிச் சாய்த்துக் கொண்டு சென்று விடுவார்கள். அதாவது தமிழ் வாக்குகள் மீண்டும் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கிப் போகும். தேர்தலைப் புறக்கணிப்பது ஒரு தெரிவு. ஆனால் அதற்காக உழைக்கவேண்டும். அதை மக்கள் மயப்படுத்த வேண்டும். அதுதான் சுதந்திரத்திற்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் செய்யவேண்டியது.

## பொதுவேட்பாளர் எனப்படுபவர்

மேற்சொன்னவற்றைத் தொகுத்துப் பார்த்தால், தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கும். தமிழ்ப்பொதுவேட்பாளர் எனப்படுபவர் தமிழ்மக்களின் கூட்டு மனோநிலையின் குறியீடாக இருப்பார். அவர் தமிழ்க்கட்சி அரசியலைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடாது. தமிழ்மக்கள் மத்தியில் தற்போது தூண்டி விடப்படும் பிரதேச, சாதி, சமய, பால் அசமத்துவங்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடாது. எந்த ஒரு சிங்கள வேட்பாளரோடும் அவர் தன்னிச்சையாக டீலுக்கு போகக்கூடாது. ஜனாதிபதித் தேர்தல்மூலம் அவருக்குக் கிடைத்த பிரபல்யத்தை அவர் அடுத்தடுத்த தேர்தல்களில் முதலீடு செய்யக்கூடாது.... போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு பொதுவேட்பாளரை தமிழ் மக்கள் முன் நிறுத்துவார்களாக இருந்தால், அவ்வாறு ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவதற்குரிய கட்டமைப்புகளை தமிழ் மக்கள் உருவாக்க முடிந்தால், அது கடந்த 15ஆண்டு கால தமிழ் அரசியலில் திருப்பகரமான ஒரு நகர்வாக அமையும். தமிழ் அரசியலில் சரியான அறிவியல் முடிவுகள் எடுக்கப்பட்டபோதிலும், அவை அரசியல் தீர்மானங்களாக மாற்றப்படாததன் ஆகப்பிந்திய விளைவொன்றை தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுலராகவன்

# சில்வியா பிளாத்;

## மரணத்தைப் பின் தொடர்ந்தவள்



சில்வியா பிளாத் (Sylvia plath) அற்புதமான அமெரிக்கப்பெண் கவிஞர். அவளது கவிதை ஒன்றை தமிழாக்க முன் அவ்வளது வரலாற்றை அறிவோம் எனத் தேடினேன்.

என்னை அறியாமல் என் கண்கள் பனித்தன. அவளுக்காக அழுவதில் என்ன நியாயப்பாடு இருக்கப் போகிறது?

வெறும் முப்பத்து மூன்று வயதில் இரண்டு குழந்தைகளை அநாதையாக விட்டு விட்டு தற்கொலை செய்து கொண்டு சில்வியா, மரணித்ததை எவ்விதத்தில் நியாயப்படுத்தமுடியும்?

ஒரு தடவை தூக்க மாத்திரை சாப்பிட்டு கொண்டு தற்கொலை செய்யப் போய் தப்பிக்கொண்டாள்.

இன்னொரு தடவை தனது காரை இடது புறம் வீம்பாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தி சாக முயன்று பிழைத்து கொண்டாள். இறுதியாக, அறையை மூடி இடுக்குகளில் பேப்பரை அடைந்து, காஸ் அடுப்புக்கு மேல் முகத்தை அழுத்தி வைத்து செத்தே போய்விட்டாள். எப்போதும் சாவைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்திருக்கிறாள் போலும். கடும் மன அழுத்தத்தை சந்தித்துக் கொண்டிருந்ததே சில்வியாவின் மரணத்துக்கு காரணமானது.






கணவனின் துரோகம், பொருளாதார நெருக்கடி, குழந்தைகளை வளர்ப்பதற்கான சிரமம், இவை அனைத்தும் சில்வியாவை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன. இவற்றிலிருந்து அவளால் மீள முடியவில்லை. முடிவில் மரணம்.

"The Colossus and Other Poems" அவளது முதலாவது கவிதைத் தொகுதி.1960 இல் வெளி வந்தது. அவளது இரண்டாவது கவிதைத் தொகுதி "Ariel " இது அவளது இறப்பின் பின்னர் 1965 இல் வெளிவந்தது. "The jar bell" மட்டும் அவளால் எழுதப்பட்ட ஒரே ஒரு நாவல். இது கிட்டத்தட்ட அவளது சுய சரிதை கலந்த ஒரு நாவல் வகை.

சில்வியா தன்னுடன் ஒன்றாகப் படித்த கவிஞரான ரெட் ஹேக்ஸை (Ted Hughes) 1956 இல் திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளுக்குத் தாயானாள். இடையில் ரெட் ஹெக்ஸுக்கு வேறு ஒரு பெண்ணுடன் இருந்த தொடர்பை அறிந்து கொண்டதால் இருவரும் பிரிந்தனர். சில்வியா தற்கொலை செய்து கொண்ட சில காலத்துக்கு பின் ரெட் ஹெக்ஸின் இரண்டாவது மனைவியும் தற்கொலை செய்து கொள்கிறாள்.

ரெட் ஹெக்ஸின் வாழ்க்கை முறை கொடூரமானதால் தான் இருவரும் தற்கொலை செய்து கொண்டனர் என்கிறார்கள் விமர்சகர்கள்.

ரெட் ஹெக்ஸ் சில்வியாவின் பல கவிதைகளை அழித்து விட்டார் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

கணவனைப் பிரிந்த பின் சில்வியா தற்கொலையைத் தவிர்த்திருக்கலாம். 1982 இல் சில்வியாவுக்கு புலிட்சர் விருது வழங்கப்பட்டது. அவரது 'பிள்ளை' (Child) என்ற கவிதையைத் தமிழில் தருகிறேன்.

> **பிள்ளை**
>
> உனது பிரகாசமான கண்கள்
> இந்த உலகில் மிக அழகான ஒன்று.
> அவற்றை நான் வண்ணங்களாலும், வாத்துக்
> களாலும் நிரப்பவேண்டும்.
> புதிய மிருகக்காட்சிச் சாலையில்
> யாருடன் பயணிக்க விரும்புகிறாய்?
> சித்திரைப்பனித்துளி!
> இந்தியன் பைப் எனும் காட்டுப்பூச்செடி!
> சுருக்கம் இல்லாத இளந்தண்டே!
> குளத்தில் தெரியும் அழகிய பிம்பமே!
> உயர்ந்தவனாகவும்
> பாரம்பரியம் மிக்கவனாகவும் இரு.
> கைகளை முறுக்கிக்கொண்டு
> வாழக்கற்றுக்கொள்.
> இந்த இருண்ட வானத்தில்
> நட்சத்திரங்கள் இல்லை.

"The Colossus and Other Poems" அவளது முதலாவது கவிதைத் தொகுதி 1960 இல் வெளி வந்தது.
அவளது இரண்டாவது கவிதைத் தொகுதி "Ariel " இது அவளது இறப்பின் பின்னர் 1965 இல் வெளிவந்தது."The jar bell " மட்டும் அவளால் எழுதப்பட்ட ஒரே ஒரு நாவல். இது கிட்டத்தட்ட அவளது சுய சரிதை கலந்த ஒரு நாவல் வகை.

சில்வியா தன் தற்கொலைக்கு முன்பாக தன் குழந்தைக்கு உலகை அறிய வைக்க எழுதிய மிகப் பிரபல்யமான கவிதை இது.

குழம்பிய மனநிலையில் எழுதி இருக்க வேண்டும்.

நீண்ட தேடலின் பின்னர்தான் கவிதையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

'இந்திய பைப்' என்கிற காட்டுப் பூச்செடியை ஏன் பிள்ளைக்கு ஒப்பிட்டார்?

'அது சுயமாகத் தோன்றி வளர்கின்ற ஒரு வகைச் செடி.ஆகவே நான் சாகப் போகின்றேன் நீயும் சுயமாக வளர்ந்து கொள் ' என்ற செய்தியைப் பிள்ளைக்குச் சொல்லும் விதமாக அமைந்திருக்கலாம்.

கவிஞர்கள் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் ?

வழிகாட்டிகளாக இருக்க வேண்டியவர்கள் அல்லவா?

பாரதிக்கு வராத துன்பமா?

கவிஞர் ஆத்மாநாம் ஏன் தற்கொலை செய்து கொண்டார் ?என கவிஞர் ஒருவரிடம் கேட்டேன்.

"அதடாப்பா கவிஞன் மென்மையானவன் எதையும் தாங்கமாட்டான்ராப்பா"

'பளார்' என்று அறையத் தோன்றியது.

கவிதை மென்மையாக இருக்க வேண்டுமேயொழிய கவிஞன் மென்மையானவனாக இருக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.




பாகம் 2

36

இராகவன்

அர்த்தமுள்ள இந்துமதம்' பத்துப் பாகங்களும் புத்தக வடிவத்தில் வந்தது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் அந்தப் பத்துப் பாகமும் கசெற்றுகளாக (ஒலிநாடா) வந்தது உங்களுக்கு தெரியுமோ தெரியாது. எனக்கும் அந்தச் சங்கதி நவண்ணா மூலமாத்தான் தெரியவந்தது.

நவண்ணாவும் செல்வண்ணாவும் இரணைப்பிள்ளையள் எண்டு உங்களுக்குச் சொல்லியிருக்கிறன். செல்வண்ணா எண்பதுகளின்ரை நடுப்பகுதியில சவூதிக்குப் போனவர். இவையளின்ர மூத்த தமையன் குணரத்தினம். அவரை நாங்கள் 'குணண்ணா' எண்டு கூப்பிடுவம். அந்தாள் அப்பவே ஹாட்லிக் கொலிஜ்ஜில 'ஏ.எல்.லுக்கு' மற்ஸ் எடுத்தவர். அந்தக் காலத்தில ஹாட்லிக் கொலிஜ் வெளியிட்ட கல்லூரி மலரில நுளம்புக் கடியைப் பற்றி ஒரு நல்ல சிறுகதையும் எழுதியிருக்கிறார். அதை நான் தற்செயலா வாசிச்சிருக்கிறன். நான் வாசிச்சநேரம் குணண்ணா உயிரோடையிருக்கேல்ல எண்டதுதான் பெரிய சேதம். அதால தொடர்ந்து படிக்காமல் பொலிஸ் வேலைக்கு அப்ளை பண்ணி உடனை வேலையுங் கிடைச்சிட்டுது. முதல் நியமனம் மட்டக்களப்பு ஏறாவூஸ் பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கிடைச்சு அங்கை போனார். போய்க் கொஞ்சக் காலந்தான். அப்பதான் இயக்கம் ஏறாவூர் பொலிஸ் ஸ்ரேசனைச் சுற்றிவளைச்சு 'அற்றாக்' பண்ணிச்சுது. அதிலை செத்த ஒரேயொரு தமிழாள் எங்கட குணண்ணா தான். குணண்ணாவின்ர பிரேதத்தை அங்கையிருந்து பிளேனில பலாலிக்குக் கொண்டந்து பிறகு ஊருக்குக் கொண்டு வந்தினம். என்ர வயதில நான் கண்ட முதல் மரணம் அதுதான். அது 1985 நடந்ததெண்டு நினைக்கிறன். அப்ப எனக்கு ஒன்பது வயது. ஒரே பெருஞ்சோகத்தில ஆழ்ந்து போயிருந்தது.

குணண்ணா என்னில நல்ல வாரப்பாடு. ஆள் நல்ல சிவலை. எப்பவும் கிளீன் ஸேவிலதானிருப்பார். அவர் கதைக்கிற சத்தம் வெளியில கேக்காது. அவர் பொலிஸில சேர முன்னம் தாய்க்காரி தோசை, இடியப்பம் செய்து விக்கிறவ. அவவின்ர பெயர் பத்தினிப்பிள்ளை. நாங்களெல்லாம் அவவைப் பெரியம்மா எண்டு தான் கூப்பிடுவம். அவ செய்யிற தோசைக்கு அப்ப எங்கடையூரில பெரிய டிமாண்ட். இண்டைக்கும் அந்த ரேஸ்றில நான் இன்னுமொரு தோசையைச் சாப்பிடேல்ல. அதுக்கு ஈக்குவலாத் தோசை சுடக்கூடிய ஒரேயொராள் என்ர அம்மாதான். அதால பெரியம்மா தனக்கு ஏலாமலிருக்கிற நாள்களில அம்மாவைக் கூப்பிட்டுத் தான் தோசை சுடுவிப்பா. அண்டைக்கு எனக்கு நல்ல தாராளமாத் தோசையும் சம்பலுங்கிடைக்கும். இந்தப் பலகாரஞ் செய்யிறதுக்குக் குணண்ணா தான் மா வாங்கக் கடைக்கு ஒரு நார்ப்பெட்டியோட போவார். அவர் எப்பவும் வெள்ளைச் சாறந்தான் கட்டியிருப்பார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கி.கோவர்த்தனி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்



# கிளிநொச்சியில் ஒளிந்திருக்கும் சுற்றுலாப் புதையல்

பொருளாதாரப் பாதிப்பிலிருந்து மீளக்கூடிய ஏதுநிலைகளை இன்று இலங்கை தீவிரமாகத் தேடிவருகின்றது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த பொருளாதார நெருக்கடி நிலைமை இன்றில்லை. ஆனால், இந்த முன்னேற்றம் நாட்டின் வளர்ச்சி நிலை என்று பொருள்படாது. ஏனெனில், கடன் சீரமைப்பின் மூலமும் சர்வதேச நாணயநிதியத்தின் ஆலோசனையின் அடிப்படையிலுமே எமது நாடு தற்போது பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், இத்தகைய உதவித்தொகைகளோ கடன் தொகைகளோ எமது நாடு நிரந்தர முன்னேற்றமடைவதற்கு காரணமாக இருந்துவிடமுடியாது. ஒரு நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டுமென்றால் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை போன்றன அபிவிருத்தியும் மேம்பாடும் அடையவேண்டும். தற்போது நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தந்து பொருளாதார ஈட்டுகையில் திருப்பத்தை ஏற்படுத்துவது சுற்றுலாத்துறையாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையின் சுற்றுலாத்துறையை இலகுவில் பலப்படுத்தக்கூடிய திறன்மிக்க தேசங்களில் ஒன்றாக கிளிநொச்சியும் இருக்கின்றது என்றால் அது மிகையில்லை. இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் சுற்றுலாத் துறைசார் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், அவற்றின் முக்கியத்துவத்தையும், அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பிலும் பேசுகின்றது இந்தக் கட்டுரை.

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில்**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தில் புளியம் பொக்கணைப் பகுதியில் அமைந்துள்ள நாகதம்பிரான் கோவில் மிகவும் பிரசித்திபெற்றது. இந்தக் கோவிலானது பழமை வாய்ந்தது என்பதுடன் நாகர்கள் வழிபட்ட தலமாகவும் போற்றப்படுகின்றது. இந்த ஆலயத்தில் வருடாந்தம் பங்குனி உத்தரதினத்தன்று நடைபெறுகின்ற பொங்கல் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபடுவர். மேலும் வருடாந்த பெரும் திருவிழாவின்போதும், சிறப்புத் தினங்களின்போதும் பெருமளவிலான பக்தர்கள் இங்கு வழிபாடுகளை மேற்கொள்வர். இந்தக் கோவிலானது பசுமை நிறைந்த வயல்களின் நடுவே அமைந்துள்ளதுடன், புதுமைகள் நிகழ்கின்ற தலமாகவும் திகழ்கின்றது. ஆன்மீக சுற்றுலாவினை மேற்கொள்ளுகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு இக்கோவிலானது மிகவும் சிறந்த அனுபவங்களினை வழங்குகின்றதாகவும் காணப்படுகின்றது.

**மண்ணித்தலை சிவன் கோவில்**

பூநகரிப் பிரதேசத்தில் மண்ணித்தலை பகுதியில் மணல் மேடுகளின் நடுவே மிகவும் பழமையான சிவன் கோவில் ஒன்று அமைந்துள்ளது. இந்தச் சிவன் ஆலயம் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாக அறியமுடிகிறது. அத்துடன் ஆலயத்தின் பல பகுதிகள் சிதைவடைந்து காணப்படுவதுடன், ஒரு சிறிய பகுதியே எஞ்சிக் காணப்படுகிறது. இந்தப் பழமையான ஆலயத்தினை அதன் பழமையான வடிவமைப்புடன் புனரமைப்புச் செய்வதன் மூலமும், அதனை அண்டிய பகுதிகளில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலமும் சுற்றுலாவிகளைக் கவரமுடியும்.



அத்துடன் மணற்திட்டுகளின் சூழமைவில் அமைந்துள்ள மண்ணித்தலை கடற்கரைகளும் கிளிநொச்சி மாவட்டத்தின் மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாகவே காணப்படுகின்றது. அமைதியான அலைகள், பொன்நிறமான மணற்றுணிக்கைகள் கொண்ட இந்த நீண்ட கடற்கடை சுற்றுலாத்தலமாக மாற்றப்பட்டால் அதன்மூலம் தங்களின் பிரதேசம் மேம்பாடு அடையும் என்பதே மண்ணித்தலை மக்களின் நம்பிக்கையும் பெருவிருப்பமுமாகும்.

> தற்போது நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுத்தந்து பொருளாதார ஈட்டுகையில் திருப்பத்தை ஏற்படுத்துவது சுற்றுலாத்துறையாகவே காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையின் சுற்றுலாத்துறையில் இலகுவில் பலப்படுத்தக்கூடிய திறன்மிக்க தேசங்களில் ஒன்றாக கிளிநொச்சியும் இருக்கின்றது என்றால் அது மிகையில்லை.

**பூநகரிக் கோட்டை**

பூநகரிச் சந்தைக்கு தெற்குப் புறமாக இந்தப் பழமையான கோட்டை அமைந்துள்ளது. இது அமைக்கப்பட்ட காலங்களில் பெரிதாகக் கட்டப்பட்டிருப்பினும், தற்பொழுது சிறிதளவிலான சுவர்களும் தூண்களுமே காணப்படுகின்றன. இந்தக் கோட்டையை மேலும் சிதிலமடையவிடாது பாதுகாத்தால் அதன்மூலம் கிளிநொச்சியின் சுற்றுலா மேம்படுவது திண்ணமே.

**கௌதாரிமுனை சிவன் கோவில்**

கௌதாரிமுனையில் அமைவு பெற்றுள்ள சிவன் கோவிலும் கிளிநொச்சியின் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் பறைசாற்றுவதாகவே காணப்படுகின்றது. எனினும், இந்தப் பழைமைமிகு ஆலயத்தைப் பேணவும் கட்டிக்காக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை துரதிஷ்ட வசமானதும் வருத்தத்துக்கு உரியதுமாகும். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளுக்கென அமைக்கப்பெற்ற இந்தக் கோவிலை, அதன் வரலாற்றுச் சான்றுகளுடன் பாதுகாப்பதன் மூலம் பெருமளவிலான சமய சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடியதாக இருக்கும்.

**குளங்களின் தேசம்**

குளத்தை மையப்படுத்திய சுற்றுலாவும் அபிவிருத்தியும் கிளிநொச்சியில் தவிர்க்கப்பட முடியாததும், காலத்தேவையுமாகும். பெருமளவிலான பரப்பளவில் அமைந்துள்ள இரணைமடுக் குளத்திலிருந்து பெறப்படும் நீரை நம்பியே பலநூறு ஹெக்ரேயர்களில் விவசாயம் செய்யப்படுகின்றது. கிளிநொச்சியின் விவசாயத்தில் தவிர்க்கமுடியாததும் தன்னிகரில்லாப் பங்களிப்பையும் வழங்கிவரும் இரணைமடுக் குளத்தின் இருப்பையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்துவது நாட்டின் அபிவிருத்தியாகவுமே அமையும். ஆதலால் அரசாங்கம் இந்த விடயத்தில் கூடுதல் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அத்துடன் கல்மடுகுளம், கிளிநொச்சிக்குளம், சுண்டிக்குளம், மண்டைக்கல்லாறு போன்ற நீரேந்துப் பகுதிகளை மையப்படுத்திய புதிதாக அபிவிருத்தியும் இன்று காலத்தேவையே.

சிறு தீவுகளை மையப்படுத்திய குடியிருப்புகள் மூலம் மாலைதீவு இன்று பில்லியன் கணக்கான டொலரை வருமானமாக ஈட்டுவதைப்போன்று குளங்களையும் வயல்களையும் மையப்படுத்தி சுற்றுலா வீடுகளை அமைக்கும் பட்சத்தில் கிளிநொச்சி என்னும் பசுமைப் பூமியைக் காண்பதற்கு பல்லாயிரம் வெளிநாட்டவர்கள் படையெடுப்பார்கள் என்பதில் என்னதான் சந்தேகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org